# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 261 | சனி, நவம்பர் 18, 2023 | 14 பக்கங்கள்


## தூர தேசத்து மாவீரர் நாள்



## களத்திலே கருவான மாவீரனின் மகள் எழுதுகிறேன்...

அ.வி.முகிலினி

## இரு முனை அழுத்தங்களுடன் வெளிவந்திருக்கும் "பட்ஜெட்"



காஸாவில் இஸ்ரேல் முன்னெடுத்து வரும் போரும் தமது நாட்டுக்கான ஆதரவு குறைந்து வருவதைப் **புரிந்துகொள்ள முடியாத இஸ்ரேல் மக்களும்**

தமிழில்: ஜெயந்திரன்



அகிலன்



© 2023 இலக்கு இணையம்

## எமக்கு நிதி தேவையில்லை நீதியே வேண்டும்




எமக்கு நிதி தேவையில்லை நீதியே வேண்டும் என திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவி நாகேந்திரன் ஆஷா தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த புதன்கிழமை (15) காலை இடம்பெற்றது. அவர் மேலும் தெரிவிக்கையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்களுடைய உறவுகளை தேடி சுமார் 14 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக போராடி வருகின்றார்கள். அவர்களுக்கு இதுவரையில் எவ்வித நீதியும் கிடைக்கவில்லை. ஆனால் இலங்கை அரசு அதனை புறம்தள்ளிவிட்டு பாதிக்கப் பட்டவர்களுக்கு நட்டயீடு வழங்குவதற்காக வரவு செலவு திட்டத்தில் 1500 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். நாங்கள் நிதிக்காக போராடவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்காகவே போராடுகின்றோம். எமக்கு இலங்கை அரசின் மீது நம்பிக்கை இல்லை. சர்வதேச விசாரணை ஒன்றே எமக்கான நீதியை பெற்றுத்தரும். எனவே அதை வலியுறுத்தி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர்ச்சியாக போராடி

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## அமெரிக்காவும் சீனாவும் நேரடியான படைத்துறை தொடர்புகளை ஏற்படுத்தின



அமெரிக்காவின் நடாளுமன்ற பேச்சாளர்நான்சிபொலஸ்கியின் தாய்வானுக்கான பயணத்தை தொடர்ந்து அமெரிக்காவுடன் நேரிடையான படைத்துறை உறவுகளை முறித்துக்கொண்ட சீனா தற்போது மீண்டும் ஏற்படுத்த இணக்கம் தெரிவித்துள்ளதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சான் பிரான்ஸிகோவில் இடம்பெறும் ஆசிய பசுபிக் பொருளாதார கூட்டமைப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சீனா அதிபர் சி ஜின்பிங் அமெரிக்கா சென்றுள்ளார். அங்கு இரு தலைவர்களும் கலந்துரையாடிய பின்னரே பைடன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

2021 ஆம் ஆண்டுக்கு பின்னர் இரு தலைவர்களும் சந்தித்து பேசுவது இதுவே முதல்தடவை. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்தியாவில் இடம்பெற்ற ஜி-20 மாநாட்டில் கலந்துகொள்வதை சீன மற்றும் ரஸ்ய தலைவர்கள் தவிர்த்ததால் அமெரிக்க அதிபருடனான சந்திப்பு இல்லாது போயிருந்தது.

அதேசமயம், போதைப் பொருட்களை உற்பத்தி செய்ய பயன்படும் இரசாயணப் பொருட்களின் ஏற்றுமதியை கட்டுப்படுத்துவது, செயற்கை நுண்ணறிவு தொடர்பில் இணைந்து பணியாற்றுவது தொடர்பிருந்தும் இரு நாடுகளுக்கும் இடையில் உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

மேலும் பாலஸ்தீன விடயம் தொடர்பில் சீன அதிபருடன் பேசிய பைடன், ஹாமாஸ் அமைப்புக்கு ஈரான் உதவுவதை சீனா தடுக்கவேண்டும் என கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்தள்ளார்.

## ரணிலின் வரிக் கொள்கை எட்டமுடியாதது - பிற்ச் நிறுவனம்




இந்த வாரம் இலங்கை அரசு சமர்பித்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ள 47 விகித வரி அறிவிடு என்பது எதிர்வரும் வருடத்தில் எட்டமுடியாத ஒன்று என அனைத்துலக நிதி முகாமைத்துவ தரப்படுத்தும் நிறுவனமான பிற்ச் நிறுவனம் கடந்த புதன்கிழமை (15) தெரிவித்துள்ளது.

இந்த கொள்கை அனைத்துலக நாணயநிதியத்தின் நிதி வழங்கலையும் பாதிக்கலாம். எதிர்வரும் வருடம் நடைபெறவுள்ள தேர்தலை கருத்தில் கொண்டு தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு மற்றும் ஓய்வூதிய சலுகைகளையும் அரசு அறிவித்துள்ளது. அதாவது ஒன்றுக்கு ஒன்று முரனான வரவு செலவுத்திட்டமாகவே இது உள்ளது.

எனவே எதிர்வரும் வருடம்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

## கட்டளையிடப்பட்ட தவறாளர்களுக்கான போதைவஸ்து பாவனை மற்றும் விழிப்புணர்வு நிகழ்வு



திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட கட்டளையிடப்பட்ட தவறாளர்களுக்கான போதைவஸ்து பாவனை தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் வியாழக்கிழமை (16) இடம்பெற்றது.


தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வானது கந்தளாய் நீதவான் நீதிமன்றத்தில் இயங்கும் பிராந்திய சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்றது. இதில் நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்ட தவறாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

போதை பாவனையில் இருந்து விடுபடுவதற்கான வளத்துணை செயற்பாடுகள் மற்றும் உடல் உள ரீதியான தாக்கங்கள் சமூக சீர்கேடு போன்ற பல பாதக விடயங்களில் இருந்து தங்களை பாதுகாக்கும் வழிமுறைகள் தொடர்பில் வளவாளர்களால் விழிப்புணர்வூட்டப்பட்டது. தம்பலகாமம், கந்தளாய், கிண்ணியா ஆகிய பகுதிகளை சேர்ந்த தவறாளர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் வளவாளர்களாக கப்பல்துறை ஆயுர்வேத வைத்தியசாலையின் சிரேஷ்ட பதிவாளரும் வைத்தியருமான சாஸ்வதா சிவபதிஸ், வைத்தியர் ஆர்.எம்.மல்சா ஜெயரட்ண உள்ளிட்டோர்கள் கலந்து கொண்டு பல விடயங்களை தெளிவூட்டினர்.

இதில் திருகோணமலை மாவட்ட பிராந்திய சமுதாயம்சார் சீர்திருத்த உத்தியோகத்தரும் பொறுப்பதிகாரியுமான எம்.எச்.முபாரக், சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன், சமுதாயம் சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.ஹம்சபாலன், சமூக சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## காசாவுக்கு மானிதாபிமான உதவிகளை வழங்க ஐ.நா பாதுகாப்புச்சபை இணக்கம்



காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலினால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைவதை அனுமதிக்கும் தீர்மானத்திற்கு 15 உறுப்பினர்களை கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை அனுமதி வழங்கியுள்ளது.

12 நாடுகள் ஆதரவாக வாக்களித்த போதும், நிரந்தர உறுப்புரிமை கொண்ட வீட்டோ அதிகாரம் உள்ள நாடுகள் எவையும் அதற்கு எதிராக வாக்களிக்கவில்லை. அமெரிக்காவிவும், பிரித்தானியாவும் வாக்கொடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

எனினும் மனிதாபிமான உதவிகள் சென்றடைவதற்காக நிபந்தனை என்ற தீர்மானத்தின் சொல்லை உதவிகள் சென்றடைவதை கோருகின்றோம் என மென்மையாக மாற்றியதுடன், நிபந்தனைகள் இன்றி ஹமாஸ் பிணைக் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் சேர்க்கப்பட்ட பின்னரே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மால்ட்டா இந்த தீர்மானத்தை முன்வைத்திருந்தது.

இது எமக்கு கிடைத்த சந்தர்ப்பம், இதனை பயன்படுத்தி நாம் பொதுமக்களின் உயிரிழப்புக்களை தடுப்பதுடன், சிறுவர்களையும் களமுனைகளில் இருந்து பாதுகாக்க முன்வரவேண்டும் என மால்ட்டாவின் ஐ.நாவுக்கான பிரதிநிதி வனீசா பிரேசியர் தெரிவித்துள்ளார்.

## இலங்கை – இந்திய உறவுக்கு தமிழகம் ஆபத்தானது



இலங்கை இந்திய நல்லுறவுக்கு தமிழகம் ஆபத்தானது என இந்திய மத்திய அரசு கருதியதால் தான் தமிழக முதல்வர் மு.க. ஸ்ராலினின் உரையை இலங்கையில் இடம்பெற்ற நாம்-200 என்ற நிகழ்வில் ஒலிபரப்ப இந்திய மத்திய அரசு அனுமதிக்கவில்லை என இந்திய பத்திரிகையான இந்து தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற மலையக மக்களின் இலங்கை வரவை குறிக்கும் 200 ஆவது ஆண்டு நிகழ்வான நாம்-200 என்ற நிகழ்வில் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் மற்றும் பாரதிய ஜநதா கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலை உட்பட பலர் பங்கு பற்றியிருந்தனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்கு தமிழகத்தின் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசுக்கு அழைப்பிதழை நிகழ்ச்சியின்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## பண்ணையாளர்களின் போராட்டத்திற்கு உடனடித் தீர்வைக்காண நாம் ஒன்றுபட வேண்டும்

மட்டக்களப்பில் தமிழ் மக்களின் வாழ்வு அழிவடையும் நிலையில் உள்ளதையே மாதவனை மற்றும் மயிலத்தமடு கால்நடைவளர்ப்போர் மேற்கொண்டுவரும் போராட்டம் எடுத்துக்காட்டுகின்றது. சட்டவிரோத குடியேற்றம், படைத்துறை ஆக்கிரமிப்பு, தமிழ் மக்கள் தொடர்பில் இலங்கை அரசின் செயற்திறனற்ற நடவடிக்கை, சிங்கள மக்களின் ஆக்கிரமிப்புக்கு வழங்கப்படும் இலங்கை அரசின் ஆதரவு இவற்றுக்கு எதிராக அங்கு மக்கள் கடந்த இரண்டு மாதமாக போராடி வருகின்றனர்.

அம்பாறை மட்டக்களப்பு எல்லையில் உள்ள இந்த கிராமங்கள் 1972 ஆம் ஆண்டில் இருந்தே கால்நடைவளர்ப்பை தொழிலாக கொண்ட கிராமங்கள். 2009 ஆம் ஆண்டு ஆயுதப்போர் மௌனிக்கப்பட்ட பின்னரே அங்கு சிங்களக் குடியேற்றங்கள் அதிகரித்தன. மதத்தையும், மொழியையும் பயன்படுத்தி அங்கு பாரிய அளவில் மனிதஉரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த கிராமங்கள் 200,000 கால்நடைகளின் மேச்சல் நிலங்களை கொண்டது. அங்கு வாழும் 3,000 தமிழ் குடும்பங்களின் வாழ்வாதாரமாக அவை விளங்குவதுடன், உள்ளூர் பொருளாதாரத்திலும் அது கணிசமான பங்கை வகிக்கின்றது. அடர்ந்த காடும், அதனை சூழவுள்ள தென்னைமரங்களும், பொருளாதாரத்தில் மட்டுமல்ல சூழலின் உயிரினப் பரம்பலுக்கும் முக்கியமானது.

2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் அங்கு 4000இற்கு மேற்பட்ட கால்நடைகள் சுட்டுக் கொல்லப்பட்டும் காணாமலும் போயுள்ளன, ஆனால் இதுவரையில் அதற்கு பொறுப்பானவர்கள் கைதுசெய்யப்படவோ தண்டிக்கப்படவோ இல்லை. அந்த பிரதேசத்தில் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் தமிழ் பண்ணையாளர்களை அடித்து துரத்துவது, பயமுறுத்துவது, தாக்குதவது, அவர்களுக்கு செந்தமான வீடுகள் மற்றும் வாகனங்களை சேதப்படுத்துவது, உடைமைகளை களவாடுவது, விவசாய உற்பத்திகளை கொழுத்துவது, வயல்களுக்கு தீயிடுவது, கால்நடைகளை பலவந்தமாக அபகரிப்பது போன்ற செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த செயற்பாடுகளால் அங்கு நாளொன்றிற்கு உற்பத்தி செய்யப்படும் 5500 லீற்றர் பாலின் அளவு தற்போது 300 லீற்றர்களாக குறைந்துள்ளது. இது அந்த மக்களுக்கான பாதிப்பு மட்டுமல்ல இவ்வாறான வன்முறைகளில் இருந்து மீளமுடியாமல் அந்த பிராந்தியத்தையே பாதித்துள்ளது. சட்டவிரோத குடியேற்றங்களை தடுக்க இலங்கை அரசு தவறியதே இந்த பிரச்சனைக்கான மூல காரணம்.

சிங்கள காவல்துறையினரும், பௌத்த துறவிகளும், அரசியல்வாதிகளும் அத்துமீறிய குடியேற்றங்களுக்கு துணைபோகின்றனர். அரசு கண்டுகொள்ளாமல் இருக்கின்றது. 1930 ஆம் ஆண்டுக்குரிய ஆவணங்களின் படி இது வனத்துறைக்கு செந்தமான பிரதேசம், அது மேச்சல் நிலங்களாக வரையறுக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் 1978 ஆம் ஆண்டு அது மகாவலி அபிவிருத்தி அமைச்சின் கீழ் வந்தாலும், சிங்களவர்களின் குடியேற்றம் அங்கு சட்டவிரோதமானது. 2022 ஆம் ஆண்டு மேல் நீதிமன்றம் சட்டவிரோத குடியேற்றங்களை தடுக்கும் தீர்ப்புக் களை வழங்கியபோதும், அது அங்கு நடைமுறைப்படுத்தப் படவில்லை. கிழக்கின் முன்னாள் ஆளுநர் அனுராத ஜகம்பத் மற்றும் அரசியல்வாதிகள் அங்கு சட்டவிரோதமாக குடியேறிய கிராமங்களின் பெயர்களை மாற்ற முற்பட்டதுடன், அங்கு பௌத்த ஆலையத்தையும் அமைக்க முற்பட்டிருந்தனர். அவர்களின் இந்த நடவடிக்கை அந்தபிரதேசத்தில் மேலும் பதற்றத்தை தோற்றுவித்துள்ளது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## தாயக இறைமையைப் பாதுகாக்கச் சனநாயக வழிகளில் இலக்குகளை உருவாக்கிச் செயற்பட அழைக்கும் மாவீரர்கள்!

ஈழத்தமிழர்களின் தாயகத்தின் தேசிய நாள் அதன் மாவீரர் நாளான கார்த்திகை 27. தேசிய நாள் என்பது மக்கள் தேசமாக எழுந்து தங்கள் தாயக இருப்பையும் மக்களின் இறைமையையும் பாதுகாப்பான அமைதி வாழ்வையும் எந்நாளும் காப்போம் என உறுதிமொழியெடுக்கும் நாளாகவே உலகெங்கும் முன்னெடுக்கப்படுவது வழக்கு. அதற்கு ஈழத்தமிழர்களும் விதிவிலக்கல்ல. எனவே இந்நாளில் தங்கள் தாயகத்திற்காகவும் தங்கள் தேசமக்களுக்காகவும் இன்னுயிர் ஈந்த மாவீரர்களைத் தேசிய வீரர்களாக உலகின் முன்நிறுத்தி நன்றியோடு வீரவணக்கம் செய்யும் தேசக்கடமையாக உலகு முன்னெடுக்கும் உலகப்பண்பாட்டுக்கு அமைய 1978 முதல் 2009 வரை தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் தலைமையில் நடைமுறையரசாக விளங்கிய ஈழத்தமிழர்களின் ஆட்சிக்காலத்தில் 1989 முதல் இன்று வரை ஈழத்தமிழர்களின் மாவீரர்களை நெஞ்சிருத்தி கார்த்திகை 27ம் நாள் உலகத் தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மாலை ஆறுமணிக்கு மாவீரப் பொதுச்சுடர்த் தீபமேற்றப்பட்டதும் அவர்களின் துயிலகங்களிலும் தமிழர்தாயகம் எங்கும் மக்கள் தீபமேற்றி மாவீரர்களுக்கு வீரவணக்கம் செய்வது ஈழத்தமிழர் தேசக்கடமையாகி அந்நாள் ஈழத்தமிழரின் தாயகத்தின் தேசிய நாளாக உலகின்முன் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

அதே வேளை 2009ம் ஆண்டு மே 17 இல் சிறிலங்கா தேசமாகவே ஈழத்தமிழர்களில் 176000 பேரை இனஅழிப்பு செய்த வரலாற்றின் பின்னர் மாவீரர்நாள் தாயகத்திலும் உலகமெங்கும் தாயக இறைமையைப் பாதுகாக்க சனநாயகவழிகளில் இலக்குகளை உருவாக்கிச் செயற்பட, மாவீர்கள் மக்களை அழைக்கும் நாளாக இந்நாள் உணரப்படுகிறது. இதனால் மரணத்தை வென்ற மனிதகுலமான மாவீரர்கள் வாழுகின்ற மக்களுக்கு ஒளியுடம்பு தாங்கி அறிவுத் தெளிவும் ஆக்க சத்தியும் அளிக்கும் வாழ்கின்ற தன்மை கொண்டவர்களாக, ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரினதும் உள்ளத்திலும் இல்லத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்று சொன்னால் மிகையாகாது. எங்களுக்காக எங்களின் மண்ணையும் எங்களையும் பாதுகாக்கும் பெருநோக்கில் தங்கள் வாழ்வையும் வளங்களையும் இன்னுயிர்களையும் ஈகம் செய்து எம் மக்களுக்கு அன்றாடம் வாழ்வதற்கான சத்தி அளித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த எம்மோடு வாழுகின்ற மாவீரர்களுக்கான வீரவணக்கம் என்பது அவர்களின் நோக்கான ஈழத்தமிழர் தாயகத்தின் இறைமையையும் மக்கள் ஒருமைப்பாட்டையும் நாம் ஒவ்வொருவரும் பாதுகாக்க உழைப்பது ஒன்றே என்பதை ஒவ்வொரு ஈழத்தமிழரும் உணர்ந்து செயற்பட வேண்டும். ஈழத்தமிழரின் ஒருமைப்பாடு என்பது ஈழத்தமிழரில்தான் உண்டு என்பது இவ்விடத்தில் முக்கியமான விடயம். இதனை ஊக்குவிக்க என்ன இலக்குகளை உருவாக்கி வருகின்றோம்?

இன்று 34வது ஆண்டு மாவீரர்நாளும் தேசிய நாளும் ஈழத்தமிழர்களால் முன்னெடுக்கப்படும் நேரத்தில் ஈழத்தமிழர் தாயகத்தில் படைபல ஆக்கிரமிப்புச் செய்து இனஅழிப்பாலும் மண் ஆக்கிரமிப்பாலும் ஈழத்தமிழர்களின் வாழ்வியலை மறுத்து அவர்களை தாயகத்தில் இருந்து வெளியேற வைக்கும் அளவுக்கு இனங்காணக்கூடிய அச்சத்தை அனைத்துலக சட்டங்களுக்கு எதிரானவகையில் சிறிலங்கா விளைவித்துக் கொண்டிருக்கிறது. இதனை தடுப்பதற்கான இலக்குகள் எவற்றை எவ்வாறு உருவாக்கி வருகின்றோம்? மறுபுறத்தில் இளையோர் வாழ்வை வரட்சியும் வெறுமையும் கொண்டதாக மாற்ற அவர்களின் உடல் உள இருப்பை நாள்தோறும் சீர்குலைக்கக் கூடிய போதைப்பொருள்கள் வழக்கத்தையும் கட்டற்ற பாலியல் பழக்கத்தையும் அவர்கள் தங்களின் பெற்றோர்களுக்கு ஆசிரியர்களுக்குத் தெரியாதவாறு இலகுவில் பழகுவதற்குரிய அத்தனையையும் அனைத்துலகச் சிறுவர்கள் பாதுகாப்புச் சட்டங்களை மீறி நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இதனை மாற்றுவதற்கான இலக்குகள் எவ்வாறு உருவாக்கப்பட்டு வருகின்றன.

பெண்களுக்குரிய நாளாந்த வாழ்வுக்கான அத்தனை பாதுகாப்புச் சட்டங்களும் ஒழுங்குகளும் மீறப்பட்ட இடமாக ஈழத்தமிழர் தாயகம் மாற்றப்பட்டு வருவது மட்டுமல்லாமல் கூலி அடிமைகளாகப் பெண்களை பிறரில் தங்கிவாழ வைக்கும் அளவுக்கு அவர்களுக்கான தொழில் வாய்ப்புக்கள் கல்வி பயிற்சிகள் இல்லாத நிலை ஈழத்தமிழர் தாயகப் பகுதிகளில் நாளாந்த வாழ்வாக்கப்பட்டு வருகிறது. இதனை மாற்றுவதற்கான இலக்குகளை எவ்வாறு உருவாக்கி வருகின்றோம்? அதே வேளை அனைத்துலக வல்லாண்மைகளுக்கும் பிராந்திய மேலாண்மைக்கும் ஈழத்தமிழர் தாயகத்தின் நிலமும் கடலும் சிறிலங்காவால் விற்கப்பட்டு ஈழத்தமிழர்களின் மண்ணும் கடலும் அவர்களிடம் இருந்து தனிமைப்படுத்தப்படுவதால் தேசம் என்ற நிலையில் ஈழத்தமிழர்களின் இருப்பு சீர்குலைக்கப்பட்டு அவர்களின் தேசஇனம் என்ற நிலை கரும்பு தேய்ந்து கட்டெறும்பான கதையாகக் கரும்பாக இருந்த ஈழத்தமிழரின் வாழ்வு இன்று முற்றிலும் சுரண்டப்பட்டு சுரண்டுகின்ற கட்டெறும்பான சிறிலங்காப் படைகள் உயிர்வாழும் இடமாக மாற்றப்பட்டு வருகிறது. இதனை நிறுத்துவதற்கான இலக்குகள் எவற்றை செயற்படுத்தி வருகின்றோம்? ஈழத்தமிழர்களுக்கு ஏற்படுத்தப்படும் இருப்புக்குலைப்பைத் தட்டிக் கேட்க வேண்டிய பொறுப்பாளராகத் தன்னைத் தானே 1987 இலங்கை இந்திய உடன்படிக்கையின் மூலம் நியமித்துக் கொண்ட பிராந்திய மேலாண்மையான இந்தியா இதனை ஏறெடுத்தும் பார்க்காது சிறிலங்கா இராணுவத்துக்கு பயிற்சி அளிக்கும் அரசாக 9வது ஆண்டாக நண்பர்களின் சத்தி எனத் தமிழில் பொருள் பெறும் "மித்திரசக்தி 2023" என்னும் இந்திய சிறிலங்கா கூட்டு இராணுவப்பயிற்சியால் சிறிலங்காப்படைகளுக்கு வலுவூட்டலை பூனேயில் அளித்துக் கொண்டிருக்கிறது.

இந்தியாவுக்காகச் சீனாவுடன் பேசவே கூடாது என்னும் அளவுக்கு இந்தியாவைப் போற்றும் ஈழத்தமிழர்கள் இந்தியாவின் இத்தகைய செயல்களை மாற்ற என்ன இலக்குகளைச் செயற்படுத்தி வருகின்றனர்? ஆசிய வல்லாண்மையான சீனா தன்னை தெற்காசியாவின் மேலாண்மையாக முன்னிறுத்தி புதிய அரசியல் ஒழுங்குமுறையை முன்னெடுக்கும் தன் மண்டலங்கள் பாதைகள் திட்டத்தில் தனது அடுத்த ஆராய்வுக்கப்பலை சனவரி மாதம் முதல் வாரத்தில் இலங்கைக் கடலில் நிலைப்படுத்துவதற்கான அறிவிப்பை இவ்வாரத்தில் விடுத்துள்ளது. அதனுடன் கூட வடக்கிலும் கிழக்கிலும் சீன முதலீடுகள் உண்டென்பதை உறுதிப்படுத்தி தமிழர்களை தங்களுடன் ஒத்துழைக்குமாறு சீனத்தூதுவரே தனக்குப் பிடித்த சுற்றுலாத் தளமாகப் பருத்தித்துறைச் சக்கோட்டையைத் தெரிவு செய்து அங்குவந்து நின்று அழைப்பும் விடுத்துள்ளார். சீனாவுடன் போகர் காலம் முதலே நீண்ட வரலாற்றுத் தொடர்புடைய தமிழர்கள், சீனா சார்பு சண்முகதாசன் அவர்களால் தங்களின் சமுகவிடுதலைக்கான தளத்தையே அமைத்த ஈழத்தமிழர்கள் இன்று சீனாவுடன் எத்தகைய முறையில் ஈழத்தமிழரின் சமுக பொருளாதார வளத்தைப் பெருக்க இலக்குகளை உருவாக்கி வருகின்றனர்? அதே வேளை சன்பிரான்சிஸ்கோவில் சீன அமெரிக்கத் தலைவர்களின் ஆசிய பசுபிக் மாநாட்டையொட்டிய பேச்சுவார்த்தைக்குப் பின் சீனத் தலைவரை சர்வாதிகாரியென வெளியே வர்ணித்த அமெரிக்கத் தலைவரின் கூற்றுக்கு விளக்கமளித்துள்ள அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் அன்ரனி பிளிங்டன் "வேறு எந்த நாட்டையும் விட அதிக விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய உறவு சீனாவெனவும் இது உண்மையான போட்டியும் கூட. இது மோதலாக மாறாதிருக்க நாம் முயற்சிக்க வேண்டும்" எனவும் கூறி சீன அமெரிக் இன்றைய நடைமுறையின் உண்மை நிலையை உலகுக்கு தெளிவாக்கியுள்ளார்.

ஈழத்தமிழரின் தாயகப் பகுதியை இந்த சிக்கலான உறவு தரக்கூடிய விளைவுகளை அனுபவிக்கும் தளமாக மாற்றச் சிறிலங்கா சனாதிபதி செய்யும் முயற்சியானது எத்தகைய விளைவுகளைக் கொடுக்கும் என எண்ணிப்பார்க்கவே அச்சமாகவுள்ளது. முதன்முதலில் ஈழத்தமிழரின் கல்விக்குப் பாரிய உதவியாக மானிப்பாய் கிறின் நினைவு வைத்தியசாலையையே அமைத்து தமிழ்மொழி மூலம் மருத்துவக் கல்வியை உருவாக்கி 25 மருத்துவர்களுக்குப் பட்டம் பெற உதவிய அமெரிக்க மக்களுக்கு, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியையே அமைத்து அறிவியல் வளர உதவிய அமெரிக்க மக்களுக்கு, இன்றைய சூழலில் ஈழத்தமிழர் இன்றைய பிரச்சினைகள் எந்த அளவுக்கு விரைவாக விளக்கமாகக் கிடைக்கின்றன? இதற்கான இலக்குகள் என்ன? எனவே இலக்குகளை உருவாக்கிச் செயற்படுவதே மாவீரர்களுக்கான சிறப்பான வீரவணக்கமாகும் என்பதை இலக்கு வலியுறுத்திக் கூறவிரும்புகிறது.

**ஆசிரியர்**

# மாவீரர் க(வி)தை

மண்ணில் புதைந்த சதை - அது
மாவீரர் எனும் விதை..
ஈகம் விளைந்த மலை - எம்
தமிழீழம் சொல்லும் கதை

ஆம்...!
மனிதப் புனிதர் ஆனவர் மாவீரர் - எம்
மண்ணை காத்த மாமலை மாவீரர்!

சாவைக் கழுத்தில் அணிந்தவர் மாவீரர்-
அச்சாவை எதிர்த்துத் துணிந்தவர்
மாவீரர்!

நெருப்பை நெஞ்சில் நெய்தவர்
மாவீரர்- எதிரி இருப்பை அறிந்து
எய்தவர் மாவீரர்!

உயிரை உருவிக் கொடுத்தவர் மாவீரர்-
எதிரி உயிரை எடுக்க வெடித்தவர்
மாவீரர்!

துவக்கால் திசைகள் அறிந்தவர் மாவீரர்
- ஈழ இலக்கால் கிழக்கைத் திறந்தவர்
மாவீரர்!

தலைவர் வழியில் விடிந்தவர் மாவீரர்
- எம் இலட்சிய கனவை சுமந்தவர்
மாவீரர்!

கார்த்திகை காந்தளில் சிரிப்பவர்
மாவீரர்-எம் செண்பகக் குயிலாய்
இசைப்பவர் மாவீரர்!

சிறுத்தைப் புலியாய் சினந்தவர் மாவீரர்
- எம் விடுதலை திறக்க சிவந்தவர்
மாவீரர்!

துயிலும் இல்லம் தொலைந்தால்
என்ன..!
தொலையாது எங்கள் மாவீரர்
எண்ணம்..

எரியும் தீபம் அணைந்தால் என்ன..!
அணையாது எங்கள் விடுதலை தாகம்!

மாவீரர் என்பவர் தமிழர் நடுகல்- யாம்
தலைமுறை வணங்கும் கொள்கை
உரைகல்

மாவீரர் என்பவர் தமிழர் தெய்வம்- எம்
மானம் காத்திடும் தலைவர் பிம்பம்!

கவிபாஸ்கர்



# இரு முனை அழுத்தங்களுடன் வெளிவந்திருக்கும் "பட்ஜெட்"

நாட்டின் பொருளாதாரம் ஓரளவுக்கு மேம்பட்டு வருவதாக சொல்லப்படும் ஒரு பின்னணியில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சர் என்ற முறையில் கடந்த திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் சர்ப்பித்திருக்கின்றார்.

ரணில் விக்கிரமசிங்காவால் இந்த வரவு செலவுத் திட்டம் பலத்த எதிர்பார்ப்புகளுடன் வெளிவந்த போதிலும் கூட, பொருளாதார நெருக் கடிகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு எந்த அளவிற்கு உதவும் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

ஏனெனில் நாடு பொருளாதார நெருக்கடி ஒன்றுக்குள் சிக்கித் தவிக்கிறது என்பதையோ அதனை மீட்பதற்கான உபாயங்களையோ ஜனாதி பதியின் உரையிலோ அவரால் முன்வைக் கப்பட்டுள்ள யோசனைகளிலோ காணமுடிய வில்லை. பதிலாக தேர்தலை இலக்காகக் கொண்ட ஒரு பட்ஜெட்டாகவே இது பார்க்கப்படுகின்றது.

பொருளாதார நிலை மோசமடைந்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்படும் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் இது. கடந்த வரவு செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் பல விடயங்களே இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனால், தற்போது ரணில் கொடுத்துள்ள வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## நாணய நிதியத்தை திருப்திப்படுத்தவா?

இந்த முறை வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பது என்பது விக்ரமசிங்காவிற்கு இலகுவான ஒன்றாக இருந்திருக்காது. பல்வேறு அழுத்தங்களின் மத்தி யிலேயே இதனை அவர் தயாரித்திருக்கின்றார்.

ஒருபுறம் சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தங்களை அவர் எதிர்கொள்ள வேண்டியிருந் தது. மறுபுறத்தில் அடுத்த வருடத்தில் இடம்பெற வேண்டிய இரண்டு தேர்தல்களை கவனத்திற் கொள்ள வேண்டியிருந்தது.

இதனால் ஏதோ ஒரு வகையில் இரண்டு தரப்புக்களையும் திருப்திப்படுத்த அவர் முற் பட்டிருப்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆனால், அதில் அவர் வெற்றிபெற்றாரா என் பதற்கு உடனடியாக பதில் சொல்ல முடியாது. பெரும் இக்கட்டான ஒரு நிலையில் இருந்து கொண்டுதான் வரவு செலவு திட்டத்தை ஜனாதிபதி தயாரித்திருக்கின்றார் என்பது மட்டும் தெரிகின்றது.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைக் கடன் தாமதமாகிக் கொண்டு செல்லும் ஒரு நிலையில், அவர்களைச் சமாளிப்பதற்கான விடயங்களையும் கவனத்திற் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஜனாதிபதிக்கு இருந்துள்ளது. ஆனால், அடுத்த ஆண்டில் வரப் போகும் தேர்தல்கள் நாணய நிதியத்தை முழு மையாக திருப்திப்படுத்த முடியாத நிலையை அவருக்கு ஏற்படுத்தியிருக்கின்றது.

## அரைகுறையாகவுள்ள கடன் மறுசீரமைப்பு

பொருளாதார நெருக்கடி முடிவுக்கு வராத ஒரு நிலையில், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச கடன் மறுசீரமைப்பு என்பன அரைகுறையாகவுள்ளன. சர்வதேச நாணய



நிதியத்தின் இரண்டாவது தொகுதி கடன் தொகை தாமதமாகிக்கொண்டு செல்வதற்கும் அதுதான் காரணம். உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை முடித்துக்கொண்டு வாருங்கள் என சர்வதேச அமைப்புக்களும், நாடுகளும் காத்திருக்கின்றன. ஆனால், உள்நாட்டு அரசியல் நிலைமைகள் அதற் கான சந்தர்ப்பத்தை ஜனாதிபதிக்கு கொடுக்கும் நிலையில் இல்லை.

இதனால் சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் ஒருபுறம் ஜனாதிபதியை நிர்ப்பந்தித்தது. தேர்தலை எதிர்கொள்வதற்காக மக்களுக்கு ஏதாவது நிவார ணங்களை வழங்க வேண்டும் என்ற நிலை மறு புறம். இந்த நிலையில் சில அறிவிப்புக்களை ஜனாதிபதி வெளியிட்டிருக்கின்றார்.

பொருளாதார நெருக்கடி, வானுயர்ந்த விலைவாசி உயர்வு, வரி அதிகரிப்பு போன்றவற் றால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு எதனை யாவது கொடுக்க வேண்டும் என்ற தேவை ஜனாதிபதிக்கு இருந்தது. எதனையும் கொடுக்க வில்லை என்றால், "அரகலய" போன்ற ஒரு மக்கள் கிளர்ச்சி மீண்டும் உருவாகலாம் என்ற எச்சரிக்கையும் ஜனாதிபதி கவனிக்க வேண்டியிருந் தது.

## பட்ஜெட்டில் அறிவித்திருக்கும் 10 ஆயிரம் ரூபா கிடைக்குமா?

அரசாங்க ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி அறிவித்தது இதனால்தான். அதாவது, மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்குவதைத் தடுக்க இது போன்ற ஒரு அறிவிப்பு தேவையாக இருந்தது. இரண்டாவதாக பணவீக்கம், விலைவாசி உயர்வு போன்றவற்றால் தமது அத்தியவசிய தேவை களையே நிறைவேற்ற முடியாது திண்டாடும் மக்களுக்கு ஏதோ ஒரு நிவாரணத்தைக் கொடுக்க வேண்டிய தேவையும் இருந்தது. அவற்றைவிட முக்கியமாக அடுத்த வருடம் வரப்போகும் இர ண்டு தேர்தல்களையும் சமாளிக்க வேண்டும்.

அகிலன்

இந்தப் பின்னணியில் பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு கிடைக்கும் என்று ஜனாதிபதி அறிவித்திருந்தாலும், "கிடைக்கும் ஆனால், கிடைக்காது" என்ற நிலையில்தான் அதுவும் உள்ளது. ஏனெனில் இந்த அதிகரிப்பு அடுத்த ஏப்ரலில் மாதத்தில்தான் வழங்கப்படும். காரணம் இப்போது அதற்கான நிதி அரசாங்கத்திடம் இல்லை.

அதாவது, ஜனவரிக்குப் பின்னர் இருக்கப் போகின்ற பொருளாதார நிலைமைகளைப் பொறுத்துத்தான் இந்த அதிகரிப்பு கிடைக்கும். உண்மையில், வரிகளும் அன்றாட வாழ்க்கைச் செலவீனமும் கடுமையாக அதிகரித்திருக்கும் நிலையில், இந்த பத்தாயிரம் ரூபா அதிகரிப்பு என்பது மக்களுக்கு ஒரு கண்துடைப்புத்தான். உண்மையில் தொழிற்சங்கங்கள் இருபதாயிரம் ரூபா அதிகரிப்பு கோரி போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் நிலையில், இந்த பத்தாயிரம் அவர்களை எந்தளவுக்குத் திருப்திப்படுத்தும் என்ற கேள்வியும் உள்ளது.

## வருமானத்தை உயர்த்தும் அரசின் யோசனை என்ன?

சர்வதேச நாணய நிதியம் சொல்லியிருப்பதைப் போல அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப் பதற்கான யோசனைகள் என்று பெரிதாக எதுவும் இந்த பட்ஜெட்டில் இல்லை. ஏற் கனவே அறிவிக்கப்பட்டது போல, "வாற்" எனப்படும் பெறுமதி சேர் வரி 3 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனைவிட சீனி மீதான செஸ் வரி அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த இரண்டையும் விட, அரசின் வருமானத்தை அதி கரிப்பதற்கான திட்டங்கள் எதுவும் ஜனாதிபதியால் முன்வைக்கப்படவில்லை.

அதனால், இம்முறை துண்டுவிழும் தொகை பெரிதாக இருக்கிறது. அதனை ஈடுசெய்ய அரசாங்கம் என்ன செய்யப்போகின்றது என்ற கேள்வி பெரிதாக எழுகின்றது. வரவு செலவுத் திட்டத்திற்கு அமைய, 2024 ஆம் ஆண்டில் அரச வருமானம் 04,172 பில்லியன் ரூபாவாகும். அரசாங்கத்தின் மொத்த செலவீனம் 06,978 பில்லியன் ரூபாவாகும். இதற்கிணங்க, வரவு செலவு திட்டத்தில் துண்டுவிழும் தொகை 02,851 மில்லியன் ரூபா.

அடுத்த வருடத்தில் கடனையும் வட்டி யையும் செலுத்துவதற்காக அரசாங்கம் 6,919 பில்லியன் ரூபாவை செலவிடும் என எதிர்பார்க் கப்படுகிறது. இதன்படி, அடுத்த வருடத்திற்கான தேவை 7,350 பில்லியன் ரூபாவாகும். இதற்கிணங்க, அரசாங்கத்தின் கடன் எல்லையான 3900 பில்லியன் ரூபாவை மேலும் 3450 பில்லியன் ரூபாவால் அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

## துண்டுவிழும் தொகையை ஈடுசெய்வது எவ்வாறு?

ஆனால், அரசாங்கத்துக்குள்ள பிரதான பிரச்சினை என்னவென்றால், உள்நாட்டு, வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கள் இதுவரையில் முழுமையாக

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# அருவுருவமான உயிர்க்கொடையாளர்கள்

# எம் மாவீரர்கள்

## துரைராஜா ஜெயராஜா

அண்மையில் முள்ளியவளையில் ஒரு சம்பவம் இடம்பெற்றது. தனது முச்சக்கரவண்டியில் "மாவீரன்" என எழுதப்பட்ட பெயர் பலகையை காட்சிப்படுத்தியிருந்தமைக்காக அதன் சாரதியான தமிழ் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார். "மாவீரன்" என்பது தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவுபடுத்தும் பெயர். ஆகவே குறித்த முச்சக்கரவண்டியின் உரிமையாளர் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு துணைபோகிறார். அவரைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைத்து விசாரணை செய்யவேண்டும், எனக் கூறியே பொலிஸார் தடுத்துவைத்திருந்தனர். பின்னர் சட்டத்தரணிகளின் விரைவு நடவடிக்கையினால் குறித்த இளைஞர் விடுவிக்கப்பட்டார்.




மேற்குறித்த சம்பவமானது, மாவீரரை தமிழர்கள் மறந்தாலும், தமிழர்கள் மீது வன்முறைகளையும், ஒடுக்குமுறைகளையும் கட்டவிழ்த்துக்கொண்டிருக்கும் பேரினவாத சிறீலங்கா அரசும், அதன் படைக்கட்டமைப்பும் மறக்காது என்பதையே சொல்லி நிற்கிறது. அந்தளவுக்கு மாவீரர்கள், தமிழின விடுதலையின் குறியீடாக, தமிழ் தேச விடுதலைக்கான எழுச்சியின் நாயகர்களாக, ஒடுக்குமுறைகளைத் தகர்க்கும் உளப்பலமாக மாறியிருக்கிறார்கள். மாற்றப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு தடைகள், அச்சுறுத்தல்கள், கைதுகள், விசாரணைகளுக்குப் பின்பும் ஒவ்வொரு நவம்பர் மாதத்திலும் தமிழ் மக்கள் சுயமாகத் திரள்வதற்கு இதுவேதான் காரணம். தமிழ் மக்களின் விடுதலைத் தேவன்களாக மாவீரர்கள் எப்போதும் இருக்கின்றனர். எப்போதும் இருப்பர்.

### அவர்தம் கனவு

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் நாள் அதிகாலை தம் ஆயுதங்களை மௌனிப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை அவர்கள் அறிவித்தார். கனதியான அரசியல் அர்த்தமிகுந்த அர்ந்த வார்த்தைகளின் பின்னால் மறைந்திருக்கும் அர்த்தங்களுக்குள் தலையாயது மாவீரர்கள் செய்த தியாகம். அந்தத் தியாகத்தின் மூலைமூடுக்கெல்லாம் பரவியிருந்த அவர்தம் கனவு. தமிழர் தம்மைத்தாமே ஆளக்கூடிய சுயநிர்ணயமுடைய தேசம்தான் அந்தக் கனவு. ஆயுதப் போர் மௌனிப்பின் பின்னரும் கூட பல மாவீரர்கள் அந்தக் கனவோடு விதையானர்கள். தமிழ் சமூகத்திடமும், தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளிடமும், செயற்பாட்டாளர்களிடமும் மடைமாற்றி விட்டுச் செல்லப்பட்ட அந்தக் கனவு இன்னமும் சுமக்கப்படுகிறதா?

மாவீரர் நாளிலாவது இந்தக் கேள்விக்குப் பதில் தேடிப்பார்த்தால், மக்களின் மனங்களில் அந்தக் கனவு உண்டு. தடம்மாறாத தமிழ் தேசிய தலைமைகளிடமும் அந்தக் கனவு மிளிர்ந்து கொண்டிருக்கிறது. அர்ப்ப நலன்களுக்காக இன விடுதலையைக் காட்டிக்கொடுத்த தரப்பினர்தான் அந்தக் கனவைக் குழிதோண்டிப் புதைக்க கங்கணம் கட்டிநிற்கின்றனர். தாயகத்திலும் சரி, புலம்பெயர் நாடுகளிலும் சரி, அரசியல் செயற்பாடாக, இலக்கியமாக, சினிமாவாக இந்தக் கனவழிப்புக்கான முயற்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இனவிடுதலையின்பால் அதீத அக்கறைகொண்ட தமிழ்ச் சமூகம் இது போன்ற செயற்பாடுகளிடத்தில் கவனமோடிருத்தல் வேண்டும்.

### சீரமைக்கப்படாத துயிலுமில்லங்கள்

போர் முடிவுற்றுவுடன் இராணுவம் செய்த முதல்வேலை, வடக்கு, கிழக்கு முழுவதிலும் இருந்த மாவீரர் துயிலுமில்லங்களை அழித்தமை ஆகும். அதுவரைகாலமும், காலணி அணிந்த கால்கள் படாத, சத்தமாக ஒலியெழுப்பப்படாத அதிபுனிதப் பகுதியாக இருந்த மாவீரர் துயிலுமில்லங்களை ஒரே இரவில் அழித்து – அகழ்ந்து எறிந்தது இராணுவம். தமிழ் மக்களின் ஆத்மார்த்த நம்பிக்கைப் பிரதேசமாகவிருந்த மாவீரர் துயிலுமில்லங்கள் பலவற்றின் மீது



முகாமிட்டுக்கொண்டன இலங்கை அரச படைகள். இனிமேல் மாவீரர் தினம் நினைவேந்தவே முடியாது எனப் பலரும் நம்பிக்கொண்டிருக்க, போர் நிறைவுற்று அடுத்த வருடமே, பெரும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மாவீரர் நினைவேந்தல்கள் இடம்பெற்றன. 2009 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில்தான் மாவீரர் நாள் இடம்பெறும் எனக் கருதி, பல்கலைக்கழக வளாகத்தை இராணுவம் சுற்றிவளைத்து நிற்க, யாழ்.போதனா வைத்தியசாலையிலும், கிராமங்களில் இருந்த பல ஆலயங்களிலும் மாவீரத் தீபங்கள் பிரகாசித்தன. அந்தத் தடையுடைப்பு அடுத்து வந்த மாவீரர் தின எழுச்சி நிகழ்வுகளுக்குத் தமிழ் சமூகத்தின் மத்தியில் பெரும் உந்துதலை அழித்தது. அதனால் ஒவ்வொரு வருடமும் எத்தடை வரினும் மக்கள் மாவீரர் நினைவெழுச்சிகொள்ளத் தயாராகினர். கடந்த 14 வருடங்களாக இந்த எழுச்சி நாளை மறவாது பெரும் சனத் திரள்வை தமிழ் மக்கள் ஒவ்வொரு மாவீரர் துயிலுமில்லத்தின் முன்பாகவும் காட்டுகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லை, மாவீரர் நாளை நினைவுபடுத்தும் பரப்புரைகள் இல்லை, சரியான ஒழுங்குபடுத்தல் அமைப்புகள் இல்லை. ஆயினும் அந்நாளில் தமிழர்கள் சுயமாகத் திரள்கின்றனர். தாயகநிலம் துணிகரமானதன்உழைப்பையும், புலம்பெயர்தளம் பனித்தேசத்தில் உழைத்த பணத்தையும் கொடுத்து எவ்வித முரண்பாடுகளுமின்றி இப்பெரு நிகழ்வை உணர்வுபூர்வமாக நடத்தி முடித்துவிடுகின்றனர். இதுதான் அனைவருக்கும் ஆச்சரியம் தரும் நிகழ்வாக இருக்கின்றது. துரோகம், ஒற்றுமையின்மைக்கு பேர்போன தமிழர்கள், இந்த விடயத்தில் மாத்திரம் விட்டுக்கொடுப்புக்கு இடமின்றி இயங்க வைக்கும் சக்தி எது? என்ற கேள்வியே தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அழிக்க நினைக்கும் அனைத்து சக்திகளிடமும் உண்டு. அந்தக் கேள்விக்கு தமிழர்களிடமிருக்கும் பதில் என்னவெனில், மாவீரர்கள் எமக்காய் உயிர்தந்த உயிர்க்கொடையாளர்கள். அவர்தம் நினைவானது இவ்வினத்தின் விடுதலை பெருமூச்சாய் நீடித்து நிற்கும் பேரலை.

தமிழர்கள் இவ்வாறு சந்ததி கடத்தும் இந்த நினைவேந்தல் போராட்டத்தை நிலைப்படுத்த வேண்டிய பொறுப்பு தமிழ் தேசிய அரசியல் கட்சிகள், செயற்பாட்டாளர்கள் அனைவருக்குமே உண்டு. போர்முடிவுற்று 14 ஆண்டுகள்கடந்துவிட்ட நிலையிலும் எந்தவொரு மாவீரர் துயிலுமில்லத்திலும் நிரந்தரமானதொரு நினைவுத்தூபி அமைக்கப்படவில்லை. அழிக்கப்பட்டவைகள் ஆக்கிரமிப்பின் சின்னங்களாக அப்படியே கற்குவியல்களாக இருப்பினும், வருடத்திற்கு ஒருமுறை துப்பரவு செய்வதனால், அந்தக் குவியல்கள்கூட இயற்கையின் தாக்கத்தினால் அழிவடைந்து வருகின்றன. எனவே எப்போதும் புனிதமான பகுதியாகவும், சுத்தமான நிலமாகவும் இருக்கின்ற வகையில் மாவீரர் துயிலுமில்லங்கள் காப்பிடப்படவேண்டும். ஒவ்வொரு துயிலுமில்லங்களிலும் பொதுவானதொரு நினைவுத்தூபி கட்டியெழுப்பப்பட்டல் வேண்டும். அதுவே இவ்வினத்தின் விடுதலைப் பெருநெருப்பைக் காவி நிற்கும் மாவீரர்களுக்கும், அத்தீயை அணையாது வைத்திருக்கும் தமிழ் சமூகத்திற்கும் தமிழ் தேசிய அரசியல் உலகு செய்யும் பெருங்கடமையாகும்.

### கவனிப்பாரற்றிருக்கும் மாவீரர் பெற்றோர்கள்



சமநேரத்தில் வடக்கு, கிழக்கு முழுவதும் வாழும் மாவீரர்களின் பெற்றோர்கள் மிக மோசமான பொருளாதார இடர்களை எதிர்கொள்கின்றனர். இனத்தின் விடுதலைக்காகத் தம் பிள்ளைகளைக் கொடுத்த பெற்றோர் கவனிப்பாறின்றி வாழ்கின்றனர். எனவே அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், மூப்புக்காலத்தின் மருத்துவ தேவைகளைக் கவனிக்கவும், நலன்புரித் திட்டங்கள் அவசியமானவை. மறுவேளை உணவுக்கும், மாற்றுத்துணிக்கும் ஏதுமற்று நிற்கும் பல்லாயிரக்கணக்கான மாவீரர்களின் பெற்றோர்கள் தாயகம் முழுவதும் வாழ்கின்றனர் என்பதையும் தமிழ் சமூகம் கவனத்தில்கொள்ளவேண்டும்.

### செழுமைதரும் மரநடுகை

மாவீரர்நாள் இனத்தின் விடுதலைக்கான பேரெழுச்சி நாளாக மட்டுமின்றி, தேசக்கட்டுமானத்தினையும், சுற்றுச்சூழலையும் மேம்படுத்தும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மட்டக்களப்பு மாவட்டத்தின்
# இருப்புக்கான போராட்டம்

மட்டு.நகரான்

இலங்கையில் கால்நடை பண்ணைகளை அமைப்பதற்கும் கால்நடைகளை விரிவாக்கம் செய்து பால் உற்பத்தியை அதிகரிக்கப் போவதாக எதிர்வரும் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிப்பதன் ஊடாக தேசிய வருமானத்திற்கு பங்களிக்கமுடியும் என அரசாங்கம் நம்பிக்கைவெளியிட்டுள்ள அதே நேரம் கடந்த 64நாட்களாக கடும் மழைக்கும் மத்தியிலும் மட்டக்களப்பில் கால்நடை பண்ணையாளர்கள்தமது மேய்ச்சல் தரைக்காக போராடி வருகின்றனர்.




இந்த நாட்டில் காலம்காலமாக பால் உற்பத்தியில் கணிசமான பங்களிப்பினை கிழக்கு மாகாணம் வழங்கிவருகின்றது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் பால் உற்பத்தியில் பாரியளவிலான பங்களிப்பினை வழங்கிவருகின்றது. அதுமட்டுமல்ல இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் பாலில் வடகிழக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பால் அதிகளவான சத்துகள் இணைந்ததாக காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.அதற்கான காரணமாக இந்த மேய்ச்சல் தரையிருந்துவருகின்றது.ஆனால் இன்று அந்த மேய்ச்சல் தரைக்காக போராடும் நிலைக்கு மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

கால்நடைகள் மூலம் பெறப்படும் பால் உற்பத்தியை பயன்படுத்தி நாட்டின் தேசிய உற்பத்தியை அதிகரிக்கப்போவதாக மார்தட்டும் இலங்கை அரசாங்கம் மட்டக்களப்பில் கடந்த 65நாட்களுக்கும் மேலாக போராடிவரும் கால்நடை பண்ணையாளர்கள் குறித்து இதுவரையில் கவனம் செலுத்தாது ஏன் என்ற கேள்வி சாதாரணமாக கிளம்பும்.அதற்கு காரணம் அவர்கள் தமிழர்கள்.

இந்த நாட்டில் தமிழர்களாக பிறந்தால் போராடியே ஆகவேண்டிய சூழ்நிலை.எமது எதிர்கால சமூகமும் போராடித்தான் வாழ வேண்டிய சூழ்நிலை.இதன்காரணமாகவே இன்று வடகிழக்கிலிருந்து பெருமளவான தமிழர்கள் புலம்பெயர்ந்து செல்லும் நிலை காணப்படுகின்றது.அனைத்து வளங்களும் உள்ள பகுதியில் தமிழர்கள் நிம்மதியாக வாழமுடியாத சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.தமிழர்கள் இந்த நாட்டில் வாழக்கூடாது என்பதற்காகவே இந்த சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் மட்டக்களப்பு மாவட்ட கால்நடை பண்ணையாளர்கள் போராடி வரும் நிலையில் மறுபுறத்தில் மைலத்தமடு, மாதவனை பகுதியில் வாயில்லா சீவன் கருவறுக்கப்படும் சூழ்நிலை ஏற் படுத்தப்பட்டுள்ளது. தினமும் மாடுகள் கொல்லப்படுகின்றன.

பண்ணையாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்.மாடுகளுக்கு எதிராக மைலத்தமடு,மாதவனை பகுதியில்முன்னெடுக்கப்படும்செயற்பாடுகளுக்கு எதிராக பாராளுமன்றத்தில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் அவர்கள் கடுமையான வகையில் பேசியிருந்தார்.புத்த பெருமான் போதித்த காருண்யம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு, மாதவனை பகுதிகளில் மீறப்படுகின்றது என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் வாய் பேச முடியாத மாடுகளுக்கு வாய்க்குள் வெங்காய வெடியை வைத்து வாயை சிதறடிக்கின்றீர்கள். இதனால் அந்த மாடுகள் உணவுகூட அருந்த முடியாமல் அணு அணுவாக செத்துப்போகின்றன. காலை இழந்த ஒரு இராணுவ வீரர் தான் இவ்வாறான கொடூரத்தை செய்கின்றார்.


Acknowledgement of Complaint
2023/11/03



மயிலத்தமடு, மாதவனையில் பெரும் பாவத்தினை இந்த நாடு செய்து கொண்டிருக்கின்றது, இலங்கையில் சமாதானத்தின் கதவுகள் இறுக மூடப்பட்டுள்ளன. நல்லிணக்கத்தின் கதவுகளுக்கு ''சீல்'' வைக்கப்பட்டுள்ளது.பௌத்தத்தை பின்பற்றுகின்ற , புத்தரின் பெயரால் விகாரைகளை அமைக்கின்ற ,அவரின் பெயரினால் இந்த நாட்டில் அநியாயங்களுக்கு எல்லாம் முடி சூட்டுகின்ற பிக்குமாரைக்கொண்டுள்ள இந்த நாட்டில் கருணையும் அஹிம்சையும் யாரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. புத்த பெருமான் சொன்ன பாவங்களை நீங்கள் எங்கே கழுவப்போகின்றீர்கள், எங்கே கரைக்க போகின்றீர்கள்? என்றும் கேள்வியெழுப்பினார் தற்போது இந்த கேள்விகளே தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக காணப்படுகின்றது.

கடந்த 05ஆம் திகதி மயிலத்தமடு பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு பொலிஸார் காவலுக்குள்ள நிலையிலும் படையினர் பெருமளவில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள நிலையிலும் அப்பகுதியில் கால்நடைகள் தினமும் கொல்லப்படுகின்றன, காயப்படுத்தப்படுகின்றன, இறைச்சிக்காக வெட்டிக் கொல்லப்படுகின்றன.

காவல்துறையினர் சட்ட விரோத குடியேற்றவாசிகளுக்கு ஆதரவான நிலையிலேயே இருந்துவருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த திங்கட் கிழமை ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றம் குறித்த பகுதியில் உள்ளவர்கள் அத்துமீறிய குடியேற்றவாசிகள் அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்திருந்தது. மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையானது மயிலத்தமடு, மாதவனை பகுதியில் அரச காணியை அத்துமீறி குடியேறியதாக 13பேருக்கு எதிராக இந்த வழக்கினை தாக்கல் செய்திருந்தது. இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஐந்து தினங்களை கடந்துள்ளபோதிலும் இதுவரையில் நீதிமன்ற கட்டளையினை நடைமுறைப்படுத்த மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையோ காவல்துறையோ நடவடிக்கையெடுக்கவில்லையென்பதே கவலைக்குரிய விடயமாகவுள்ளது.ஆனால் சட்ட விரோத குடியேற்றவாசிகளின் பயிர்களுக்கு காவல் வழங்கும் செயற்பாடுகளை காவல்துறை முன்னெடுத்துவருகின்றது.



கடந்த 65நாட்களுக்கும் மேலாக கால்நடை பண்ணையாளர்கள் தமது தொழில்களை இழந்து போராடிவருகின்றனர்.தமது உரிமையை, தமது பாரம்பரிய நிலத்தை தமக்கு வழங்குமாறு கோரியே இந்த போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆனால் பண்ணையாளர்களின் போராட்டத்தினை கவனம் செலுத்தாது சட்ட விரோத குடியேற்றவாசிகளை பாதுகாக்கும் செயற்பாடுகளையே காவல்துறை முன்னெடுத்து வருகின்றது.

மயிலத்தமடு,மாதவனை பகுதியினைப் பொறுத்த வரையில் நீண்ட நிலப்பரப்பாக காணப்படுகின்றது.கரடியனாறு, சந்திவெளி,வாழைச்சேனை ஆகிய பொலிஸ் பிரிவுகளும் ஏறாவூர்ப்பற்று,கிரான் பிரதேச செயலாளர் பிரிவுகளையும் கொண்ட பகுதியாக காணப்படுகின்றது.

மூன்று பொலிஸ் நிலையங்களின் பரிபாலனத்தில் மயிலத்தமடு,மாதவனை பகுதி காணப்படுகின்றது.ஆனால் உச்ச நீதிமன்றம், ஏறாவூர் நீதிவான் நீதிமன்றம் என இரண்டு நீதிமன்றங்களினால் விடப்பட்ட கட்டளையினை நிறைவேற்றமுடியாத நிலையில் காணப்படுகின்றது.பண்ணையாளர்களை தேடிச்சென்று நடவடிக்கையெடுக்கும் பொலிஸார் அத்துமீறிய குடியேற்றவாசிகள் தொடர்பில் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவை தெரிந்த விடயம் என்றாலும் ஓரளவுக்காவது மாவட்டத்திற்குள்ளாவது நடவடிக்கையெடுப்பார்கள் என்று பார்த்தால் எதுவும் இல்லை.

சில தினங்களுக்கு முன்னர் மயிலத்தமடு, மாதவனை பகுதி கால்நடை பண்ணையாளர்கள் சிலரை அழைத்த சந்திவெளி பொலிஸார் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் உள்ள கால்நடைகளினால் அங்கு அத்துமீறிய பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் கால்நடைகளை பண்ணைகளுக்குள் கட்டிவைக்குமாறு பணித்திருக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட விவசாய மீளாய்வுக்கூட்டங்களுக்கு வரும் பொலிஸார்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# சிறுபான்மையினரும் விகிதாசார தேர்தல் முறைமையும்

துரைசாமி நடராஜா

இலங்கையின் தேர்தல் முறை திருத்த யோசனை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. இத்திருத்த யோசனை தொடர்பில் கட்சிகள் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டு வருகின்றன. இதேவேளை தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதித்துவங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் நடைமுறையிலுள்ள பாராளுமன்ற தேர்தல் முறைமையை மறுசீரமைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் நிராகரிப்பதாக சிறுபான்மை சிறிய கட்சிகள் பிரதமரிடம் அறிவித்துள்ளன. மலையக கட்சிகளும் இதில் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை சமகாலத்தில் நடைமுறையில் உள்ளது. ஒரு குறிப்பிட்ட (பல அங்கத்துவ) தேர்தல் தொகுதியில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் அல்லது பல வேட்பாளரை உள்ளடக்கிய ஒரு குழுவுக்கோ அல்லது கட்சிக்கோ அளிக்கப்பட்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப ஆசனங்களை ஒதுக்கும் சில வகையான உபாயங்களை உள்ளடக்கிய ஒரு வாக்களிப்பு முறையே விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை எனப்படுகின்றது.



ஒரு உண்மையான ஜனநாயகத்தில் எல்லா விதமான அபிப்பிராயங்களும் அவை நாட்டில் பெற்றிருக்கும் ஆதரவுக்கு விகிதாசாரமாக சட்டசபையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும் என்பதே இம்முறைக்கு பின்னணி யாகவுள்ள தத்துவமாகும் என்று புத்திஜீவிகள் வலியுறுத்தியுள்ளனர். இத்தேர்தல் முறையிலுள்ள தனிமாற்று வாக்குமுறையை சி.சி. ஜி.அந் திரே மற்றும் தோமஸ்காரே ஆகியோர் அறிமுகப்படுத்தினர். எனினும் இந்த முறை பிரபல்யமடைவதற்கு பிரித்தானிய அரசியல் மேதை யோன் ஸ்ரூவோட்மில் காரணமாக இருந்துள்ளார்.

இலங்கையில்1978ம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பு வரைவு தொகுதிவாரி பிரதிநிதித்துவ தேர்தல் முறை நடைமுறையில் இருந்தது.எனினும் இத்தேர்தல் முறை ஜனநாயகத்துக்கு முரணானதாக கருதப்பட்ட நிலையில் பல்வேறு குறைபாடுகளையும் இத்தேர்தல் முறை கொண்டிருந்ததாக சுட்டிக்காட்டப்பட்டது. நாடு தழுவிய ரீதியில் கட்சிகள் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப, பாராளுமன்றத்தில் அவை பெறும் ஆசனங்களுக்கிடையே முரண்பாட்டுத் தன்மையை அவதானிக்க முடிந்தது. அதாவது விகிதாசாரம் பேணுவதாக அமைந்திருக்கவில்லை.

ஒரு தேர்தல் தொகுதியில் பெரும்பாலான வாக்காளர்கள் விரும்பாத போதும் உறுப்பினராக ஒருவரை தெரிவுசெய்யும் நிலை காணப்பட்டது. மேலும் இத்தேர்தல் முறையில் வாக்காளர்களின் தெரிவுகளுக்கிடையே ஒரு சமத்துவமற்ற தன்மை காணப்பட்டது. இவ்வாறாக பல்வேறு குறைபாடுகளை தொகுதிவாரி பிரதிநிதித்துவ தேர்தல் முறை கொண்டிருந்த நிலையில் அதனால் ஏற்பட்ட அதிருப்தி நிலையானது விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்கு உந்துசக்தியாக அமைந்தது.



அத்தோடு திறந்த பொருளாதார முறைக்கு சார்பாக உருவாக்கப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு அடிக்கடி மாற்றப்படுவதை தடைசெய்ய வேண்டும் என்பதை இலக்காக கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு சார்பான வகையிலேயே விகி தாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையை அறிமுகப்படுத்தி இருந்தது என்பதும் உண்மையாகும்.

### புஸ்வாணமாகிய கோரிக்கைகள்

விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை பல்வேறு சாதக விளைவுகளுக்கும் வித்திடுவதாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.இதனடிப்படையில் கட்சிகள் பெற்ற வாக்குகளுக்கும் அவற்றுக்கு கிடைக்கும் ஆசனங்களுக்குமிடையே விகிதாசாரத்தை பேணுவதாக அமைதல். ஜனநாயகம் என்பது பெரும்பான்மையோர் ஆட்சி என்ற தத்துவத்தை இயலச்செய்தல். நாட்டின் சகலவிதமான அரசியல் அபிப்பிராயங்களும் ஆட்சி அமைப்புக்களில் பிரதிநிதித்துவம் பெறுவதை இயலச் செய்வதாக அமைந்திருத்தல்.

பலமான எதிர்க்கட்சி ஒன்றினை உருவாக்கும் நிலை ஏற்படுதல். தொகுதிவாரியாக செறிவாக இல்லாத இனங்கள் மாவட்ட ரீதியில் கணிசமான அளவு இருப்பின் தங்களுடைய பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்பும் வாய்ப்பு ஏற்படுதல் போன்ற பலவும் இத்தேர்தல் முறையினால் கிடைக்கின்றது. மேலும் இம்முறையின் மூலம் இடைத்தேர்தல் இல்லாததால் இடைத் தேர்தலுக்காக செலவிடப்படும் பணம் மீதமாகின்றது என்றெல்லாம் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைக்கு சாதகமான பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதனடிப்படையில் முன்வைக்கப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை சமகாலத்தில் இலங்கையில் நடைமுறையில் உள்ளது. எனினும் இத்தேர்தல் முறை எதிர்பார்ப்புகளை மழுங்கடித்து நாட்டின் அபிவிருத்திக்கும் ஐக்கியத்திற்கும் குந்தகமாக இருந்து வருகின்ற விடயம் பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இதனடிப்படையில் விகிதாசார தேர்தல் முறையின் பாதக விளைவுகள் பின்வருமாறு முன்வைக்கப்பட்டுள்ளன. இத்தேர்தல் முறையை விளங்கிக் கொண்டு உரியவாறு வாக்களிப்பதில் வாக்காளர்கள் இடர் படுகின்றனர். இதனால் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இம்முறையின் மூலம் இடைத்தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு வாய்ப்புகள் இல்லாததால், இடைக்காலங்களில் அரசாங்கக் கட்சி மற்றும் எதிர்க்கட்சி குறித்த. மக்களின் நிலைப்பாட்டை அறியமுடியாதுள்ளது. தேர்தலுக்கான செலவுகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

உட்கட்சிக்குள்ளேயே அல்லது உட்கட்சி வேட்பாளர்களுக்கிடையிலேயே பிரிவினைகள் அல்லது பிளவுகள் ஏற்படுவதற்கு இத்தேர்தல் முறை வலுசேர்க்கின்றது. தேர்தல் மாவட்டமாக அல்லது பல் அங்கத்துவ தேர்தல் தொகுதியாக தேர்தல் தொகுதிகள் அமைந்திருப்பதனால் பிரதிநிதிகளின் கண்காணிப்பு எல்லை அதிகமாக உள்ளது. இதனால் பிரதிநிதிகளுக்கும் மக்களுக்கும் இடையே பாரிய இடைவெளி காணப்படுகின்றது.

பிரதிநித்துவ முறையின் கீழ் வேட்பாளர்கள் நியமனப் பட்டியல் அடிப்படையில் இடம் பெறுவதால் வேட்பாளர்களின் சுதந்திரம் பாதிக்கப்படுகின்றது. விருப்பு வாக்கு முறை ஒரே கட்சியின் வேட்பாளர் மத்தியில் பிளவுகளுக்கு வலுசேர்க்கின்றது.



இம்முறையில் காணப்படும் போனஸ் உறுப்பினர் முறையானது உண்மையான விகிதாசார பிரதிநிதித்துவ முறைக்கு தடை யாகவுள்ளது. அரசியல் கட்சிகளின் தலைமைத்துவத்தின் ஆதிக்கம் அதிகமாகும்.கட்சிப் பட்டியலில் யார் யார் இடம்பெற வேண்டுமென தலைமையே தீர்மானிப்பதாலும் தேசியப் பட்டியலில் முன்னுரிமை ஒழுங்கினை தலைமை தீர்மானிப்பதாலும் இந்நிலை ஏற்படுகின்றது என்றெல்லாம் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இக்குற்றச்சாட்டுக்களில் நியாயத்தன்மை இருப்பதையும் விளங்கிக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

இந்நிலையில் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் குறைபாடுகளை கருத்தில் கொண்டு புதிய தேர்தல் முறையொன்றினை முன்வைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாகவே எதிரொலித்து வருகின்றது. புதிய அரசியலமைப்பு குறித்த முன்னெடுப்புகள் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட நிலையில் புதிய அரசியலமைப்பு தொடர்பான மக்கள் கருத்தறியும் குழுவினரிடமும் பொதுமக்களும், அமைப்புகளும் புதிய தேர்தல் முறையின் அவசியம் தொடர்பில் கருத்துக்கள் பலவற்றையும் முன்வைத்திருந்தமையும் தெரிந்ததாகும்.

எனினும் புதிய அரசியலமைப்பு சாத்தியமாகாத நிலையில் கோரிக்கைகள் புஸ்வாணமாகி இருந்தன. இதனிடையே தொகுதிவாரி பிரதிநிதித்துவம் மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவம் இரண்டும் கலந்த கலப்புத் தேர்தல் முறை ஒன்றினை நாட்டில் அறிமுகப்படுத்துவது குறித்து ஆழமான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றிருந்தன. எனினும் இது நிறைவேறவில்லை.

எவ்வாறெனினும் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை சிறுபான்மையினர் சாதக

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# தூர தேசத்து மாவீரர் நாள்

## களத்திலே கருவான மாவீரனின் மகள் எழுதுகிறேன்...



கல்லறைகள் தொட்டு உமை அள்ளி அணைத்து அழைத்திருந்த எமக்கு குளிரில் கைகள் உரசி கன்னத்தில் வைக்க கண்ணீரின் சூடு உணரமுடியவில்லை. மரத்துப் போகிற மனங்களோடு எதையோ தேடிக் கண்கள் பதறுதே .... மாவீரர் நினைவேந்தும் இடங்களில் கொடி ஏறுகிறது. நிமிர்ந்து தான் பார்க்கிறேன் ஆனால் எம் தேசியக் கொடி சுதந்திரப் பட்டொளி வீசிப் பறக்கவில்லையே!.... பாகுபாடின்றி எம் தலைவர் மாமா உருவாக்கிய ஆயிரம் ஆயிரம் கல்லறைகளின் நினைவுப் படங்கள் இங்கே பெரிதும் சிறிதுமாய் தனிப்பட்ட எண்ணப்பாடுகளால் வலுவிழந்து நிற்பது போல ஏன் நான் உணருகிறேன் ? இருப்பினும் ஏனோ "எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே" என்ற அந்தக் காணொலி மீண்டும் ஒலிக்க மனம் நொருங்கி மண்ணில் வீழ்ந்து மீண்டும் வாருங்களேன் எம் சாமிகளே என்று கூவி அழ குமிறுகிறது நெஞ்சம்.

விளக்கேற்றும் அந்த நொடி கண்களை மூடி எம் காவிய நாயகர்களின் கல்லறைகளை நினைத்துப் பார்க்கிறேன். அப்பாவைப் புதைத்த இடம் அறியா அந்தக் குழந்தையின் கண்களுள் முள்ளிவாய்க்காலின் சிவந்த மண்தானே தென் படுகிறது. பாவியர் நாம்.... வீர வித்துக்கள் விதைந்த இடமறியாது கட்டப்படாத கல்லறைகளின் மேல் ஏறி மிதித்து எத்தனை பேர் நடந்தார்களோ என்று எண்ணுகையில் தூரதேசத்தில் நான் கைகூப்பிக் கதறி நிற்கின்றேன் கல்லறை மாதிரிகளுக்கு முன்.



ஈடுகட்ட முடியாத பெரும் வீரம் பெட்டிகளுக்குள் கட்டப்பட்டு இருப்பதாகவும் மாவீரர் நாளன்று தூசுதட்டப் படுவதுமாகத் தான் முள் கம்பி வேலிகளுக்குள் மூச்சிளந்த மகள் உணர்கிறாள். உணர்வுகளின் பெரு வெடிப்பாய் வீரத்தின் எதிரொலியாய் மாவீரர் நாளின் சில மணித்தியாலங்களை மட்டும் தான் நாங்கள் ஒரு ஆண்டு காலம் கதைத்துத் தீர்க்க வைத்து சாதித்த உணர்வோடு அலைகிறோம். கல்லறை தேசத்திற்காய் எதைச் செய்கிறோம்? ஏளனமாய் அவர்கள் எமைப் பார்த்து மனம் நொந்து சிரிப்பதை நான் உணருகிறேன்.

சன்னம் பட்டு இரத்தம் பீச்சி அடித்த போதிலும் கண் மூடும் நேரம் நெருங்கிய போதிலும் அவர்களின் கடைசிச் சிரிப்பில் தமிழீழத்தின், மக்களின் விடுதலை கனவானதை தூரதேசத்துத் தமிழீழ மக்கள் மாவீரர் நாளில் மட்டும் நினைவேந்துவது நித்தமும் நாம் அவர்களுக்கு செய்யும் துரோகம் என்பதை விளக்கேற்றும் தருணம் எனக்கு நினைவு படுத்துகிறது!... உணவைத் துறந்து உறக்கத்தை துறந்து ஆசா பாசங்கள் அனைத்தையும் துறந்து கண்மூடிப் போன கல்லறை நாயகர்களின் கல்லறைகள் மீண்டும் கட்டியெழுப்ப அடுத்த சந்ததிக்கு நீங்கள் எதை விட்டு வைக்கப் போகிறீர்கள் என அவர்கள் கேட்பது என் காதில் கூக்குரலாய் ஒலிக்குது!



முள்ளிவாய்க்காலைக் கடந்து வந்ததன் பிறகு யாரின் நினைவேந்தல் முன் நிற்பது யாருக்கு விளக்கேற்றுவது என்று தெரியாது தவிக்கும் மகளுக்கு உறுதிப்படுத்தப் படாத தன் அக்காக்களின் அவளின் பாசத்திற்கு உரியவர்களின் புகைப்படங்களுக்குள்ளும் புதை குழிகளுக்குள்ளும் மனம் புதைந்து நிற்பதை யாரிடம் சொல்லி அழுவாள்? ஏற்க முடியாத பெரும் வீரர்கள் வீழ்ந்ததை யார் கண்டார்? தூரதேசத்தில் யாரிடம் சொல்வது ? கேள்விகளுடனே எம்மவரின் ஈகை தினம் இன்னும் எத்தனை ஆண்டுகள் கடந்து செல்லும் ? யாரேனும் கல்லறை விட்டு எழுந்து வாருங்களேன் உண்மை உரைக்க!



வறண்டு போன எம்மினத்தின் வாழ்வைக் குருதி பாய்ச்சி செழிக்க வைத்தவர்களின் தியாகங்களை போற்றி வணங்கும் மாவீரர் நாளில் அவரின் தியாகங்களை அகமுணர்ந்து எம் செயலுணர்ந்து, நாங்கள் எல்லோரும் நாடிழந்த கூட்டமாக ஒற்றுமையற்ற சமூகமாக எதை சாதிக்கப் போகிறோம் என்ற கேள்விகளை அவர்களின் நினைவிலே உணருதல் நாம் அவர்க்குச் செய்யும் பெரும் நன்றிக் கடன்... ஒரு நாளில் அழுது தீர்ப்பதல்ல நம் வரலாறு. மாவீரர்களின் வரலாற்றை எம் வழிகாட்டியாக்கிச் செயற்பட வேண்டிய கட்டாயமும் கடமையும் எமக்கு உண்டு என்பதை உணர்ந்து அவர்களின் நினைவுப் படங்களின் முன் உறுதி கொள்வோம் எம் தேசத்தில் மாவீரர் கல்லறைகள் முன் அஞ்சலி செய்யும் நாளை உருவாக்குவோமென!

வீரப் பெரும் தளபதிகளும் தம் தம்பி மார்களின் வீழ்விலே கண்ணீர் சிந்தினார்கள். கல்லறைகள் முன் நினைவேந்தல்களின் முன் சிந்தப்படும் கண்ணீர் பலவீனமானது அல்ல. குமுறும் எரிமலை கொந்தளிப்பதாகக் கூட இருக்கலாம். விசம் கக்கும் பூச்சிகள் அதில் பொசுங்கி விடக் கூடும். வித்தானவர்கள் விருட் சமாவார்கள். நெஞ்சின் ஈரம் சமுத்திரமாகக் கூடும். நிம்மதியாய் உறங்குங்கள் தியாகங்கள் தளைக்கும்!

*வீரவணக்கம் மாவீரவணக்கம்.*

*தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.*

**அ.வி.முகிலினி**

## பிரித்தானியா, லண்டன் மாநகரில் எழுச்சியுடன் இடம்பெற்ற

# “எனது மக்களின் விடுதலைக்காக”

# நூல் அறிமுகவிழா



12/11/2023 ஞாயிற்றுக்கிழமை அன்று, தமிழீழ தேசத்தை சுதந்திர தேசமாக, தன்னாட்சியுடன் நிலைபெறவைத்து, கருநிலை அரசை உருவாக்கி, தமிழர்களுக்கு என்றும் வழிகாட்டும் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் ‘எனது மக்களின் விடுதலைக்காக’ எனும் ஆவண நூல் அறிமுகவிழா மிகச் சிறப்பாக லண்டனில் இடம்பெற்றது.



தமிழீழ தேசியத் தலைவர் அவர்களது சிந்தனைகள், செவ்விகள், கடிதங்கள், வாழ்த்துச் செய்திகள், அரச மற்றும் ஐநா உயர்மட்ட கடிதப் பரிமாறல்கள், மாவீரர்நாள் உரைகள் உள்ளடங்கலான வரலாற்று ஆவணத் தொகுப் பாக இந்நூல் தொகுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்நிகழ்வில் லண்டனின் பல முக்கிய தமிழமைப்புகளின் பிரதிநிதிகளும், போராளி, மாவீரர் உறவுகளும், தமிழீழ உணர்வாளர்களும், செயற்பாட்டாளர்களும், தமிழீழ மக்களுமாகக் கலந்து சிறப்பித்திருந்தார்கள். தமிழின் தலைமுறைச் செயற்பாட்டாளர்களான, தேசமறவர்களின் புதல்வியர் இந்நிகழ்விற்குத் தலைமை தாங்க, இளந்தலைமுறை தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்களால் நிகழ்வுகள் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்நிகழ்வானது, பொதுச்சுடரேற்றலுடன் இனிதே ஆரம்பமானது. பொதுச்சுடரினை மாவீரரான வீரவேங்கை சபரியின் தாயாரும், எழுத்தாளருமான திருமதி சாவித்திரி அத்து விதானந்தன், போரியல், அரசியல் ஆய்வாளரான திரு.ரவி பிரபாகரன்(அரூஸ்), நீண்டகாலமாத் தாயகப் பணியோடு இணைந்திருக்கும் திரு குகன் அண்ணா (வோல்த்தம்ஸ்ரோ), வேல்ஸ் சங்கமம் அமைப்பின் செயலாளர் திரு கலைரூபன், இளைந் தலைமுறைத் தாயகச் செயற்பாட்டாளர் செல்வி பாரதி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.



அதனைத்தொடர்ந்து தேசியக்கொடிகளின் ஏற்றம் இடம்பெற்றது. பிரித்தானியத் தேசியக் கொடியினை, இறுதிவரைதாயகத்திலும்தொடர்ச்சியாப் புலத்திலும் தாயகப் பணியாற்றும் திருமதி மதுரா அவர்கள் ஏற்றிவைக்க, தொடர்ந்து, தமிழீழத் தேசியக்கொடியினை இளந்தலைமுறைச் செயற்பபாட்டாளரான செல்வி கலையரசி மணியரசன் அவர்கள் ஏற்றிவைத்தார்.



இதனைத் தொடர்ந்து, மாவீரர்களுக்கான ஈகைச்சுடரினை மாவீரர்களான கப்டன் தேவகி, லெப் தனரஞ்சனி ஆகியோரது சகோதரர் திரு இறையமுதன் அவர்கள் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது. அக வணக்கத்தின் பின்னர் பொது மாவீரர் படத்திற்கான மலர்மாலையினை மாவீரர்களான கப்டன் மொறிஸ், கப்படன் மயூரன் ஆகியியோரது சகோதரியும், ஈழத்து எழுத்தாளருமான திருமதி சந்திரா ரவீந்திரன் அவர்கள் அணிவித்தார்.




இதனைத் தொடர்ந்து, ‘பறை விடுதலைக்கான குரல்’ பறை இசைப் போராளிகளால் தமிழர்களது பாரம்பரிய இசையான பறை இசை முழங்கி, விடுதலையைப் பறைசாற்றியது.

தொடர்ந்து, இறுதிவரை தாயகத்திலும், தொடர்ச்சியாப் புலத்திலும் தாயகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் திருமதி கலைவிழி அவர்களின் உரை இடம்பெற்றது. திருமதி கலைவிழி அவர்களின் உரையில், தமிழீழத் தேசியத் தலைவரால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும், தமிழீழ தேசக் கட்டுமானத்திலும் பெண்கள் எவ்வாறு ஆளுமை மிக்கவர்களாக வளர்த்தெடுக்கப்பட்டார்கள் என்பது பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

இதன்பின்னர், மூத்த ஊடகர், நாடகர், ஏடகர் திரு தாசிசியஸ் அவர்கள் ஆசியுரையினை வழங்கியிருந்தார்.

தொடர்ந்து, செல்வி கேனுஜா அவர்களினால் ‘தமிழை வாழ்த்தி, தலைவனைப்போற்றி’ எனும் சிறப்பு நடனம் இடம்பெற்றது.



இதனைத் தொடர்ந்து, ‘எமது மக்களின் விடுதலைக்காக’ எனும் வரலாற்று ஆவணத்தைத் தொகுத்த திரு அன்ரன் பொன்ராசா அவர்களுடனான நேரடி நேர்காணலானது செல்வி

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# காஸாவில் இஸ்ரேல் முன்னெடுத்து வரும் போரும் தமது நாட்டுக்கான ஆதரவு குறைந்து வருவதைப் புரிந்துகொள்ள முடியாத இஸ்ரேல் மக்களும்

**இறுதிப் பகுதி**

**தமிழில்: ஜெயந்திரன்**

ஹமாசினால் கடத்திச் செல்லப்பட்ட தமது உறவுகளை விடுவிக்க, காத்திரமான நடவடிக்கைகளை இஸ்ரேல் அரசு முன்னெடுக்க வேண்டும் என்று அந்த அரசைக் கோருவதற்காக, சென்னும் மேலும் நூற்றுக்கணக்கான பணயக் கைதிகளின் உறவுகளும் கடந்த சனிக்கிழமை கிர்யாவுக்கு வெளியே ஒன்றுகூடியிருந்தார்கள்.

அந்த சதுக்கத்தில் கூடாரங்களை அமைத்துத் தங்கியிருக்கும் பணயக் கைதிகளின் உறவுகள், தமது பிள்ளைகள், உடன்பிறப்புகள், பெற்றோர், பாட்டன், பாட்டிகள் மற்றும் தமது ஏனைய உறவுகள் அனைவரும் விடுவிக்கப்படும் வரை அந்த இடத்தைவிட்டு தாம் அசையப்போவதில்லை என்று உறுதிபடத் தெரிவித்திருக்கிறார்கள்.

தமது எதிர்ப்பு நடவடிக்கைகள் அரசுக்கு எதிரானவை அல்ல என்று அந்தச் செயற்பாடுகளின் ஒழுங்கமைப்பாளர்கள் குறிப்பிட்ட போதிலும், அவர்களது தற்போதைய விரக்தி உணர்வை மிகவும் தெளிவாகவே அவதானிக்க முடிந்தது.

ஹமாசின் தாக்குதலுக்கு அடுத்து வந்த சில நாட்களில், இஸ்ரேலிய அரசை விமர்சிக்க பணயக்கைதிகளின் உறவுகள் விரும்பவில்லை. அந்த நிலை தற்போது மாற்றமடைந்திருக்கிறது என்பது கவனிக்கப்படவேண்டும்.

இஸ்ரேல் அரசு, காஸா மீது தற்போது முன்னெடுத்து வரும் இராணுவ நடவடிக்கை தொடர்பாக தங்களுடன் எந்தவிதமான உரையாடல்களையும் மேற்கொள்ளாததையிட்டு தாம் மிகுந்த கோபமடைந்திருப்பதாக மிகக் கடுமையான தொனியில் எழுதப்பட்ட அவர்களது அறிக்கை தெரிவித்தது.




பணயக்கைதிகளின் உறவுகள் பிரதம மந்திரி நெத்தன்யாகுவுடன் மேற்கொண்ட சந்திப்பில் இரு தரப்புக்கும் இடையே காரசாரமான விவாதம் ஏற்பட்டிருந்தது. ஹமாஸ் ஏற்கனவே அறிவித்திருந்தது போல, 'எல்லாருக்காகவும் எல்லாரும் விடுவிக்கப்பட வேண்டும்' என்ற கொள்கை பின்பற்றப்படவேண்டும் என்ற கோரிக்கையை பணயக்கைதிகளின் உறவுகள் கோரியிருந்தனர். இருநூற்றுக்கும் மேற்பட்ட இஸ்ரேல் பணயக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டுமாயின் இஸ்ரேல் சிறைகளில் சிறை வைக்கப்பட்டிருக்கின்ற தமது 6630 உறுப்பினர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே அந்த நிபந்தனை ஆகும்.

எல்லா பாலஸ்தீனக் கைதிகளையும் விடுவிப்பது என்பது உண்மையில் பிரச்சினைக்குரியதாக இருக்கும். காரணம் என்னவென்றால், பயங்கரவாதச் செயற்பாடுகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் அந்தக் கைதிகள் மேல் சுமத்தப்பட்டிருக்கின்றன.

"இஸ்ரேல் பொதுமக்களைத் திசைதிருப்புவதற்கு ஹமாஸ் கையாளும் உளவியல் பயங்கரவாதம்" என்று ஹமாசின் நிபந்தனையை இஸ்ரேல் பாதுகாப்புப் படை சித்தரித்தது.

2011 ஒக்ரோபரில் ஹமாசினால் ஏற்கனவே கடத்தப்பட்டிருந்த இஸ்ரேலிய சிப்பாயான கிலாட் ஷாலிற் (Gilad Shalit) என்பவருக்குப் பதிலாக 1000 பாலஸ்தீனச் சிறைக்கைதிகளை இஸ்ரேல் விடுவித்திருந்தது. இஸ்ரேலிய நீதிமன்றுகளினால் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகளும் அந்த எண்ணிக்கையில் அடங்கியிருந்தனர். இவர்களில் ஒரு சிலர் விடுவிக்கப்பட்ட பின்னர், இஸ்ரேல் மீது மீண்டும் தாக்குதல்களை முன்னெடுத்திருந்தனர். ஒக்ரோபர் 7ம் திகதி ஹமாஸ் முன்னெடுத்த தாக்குதலின் சூத்திரதாரிகளில் ஒருவர் எனக் கருதப்படும் யாயா ஷின்வார் (Yahya Sinwar) விடுவிக்கப்பட்ட அந்தக் கைதிகள் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.



"பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு எதை எதையெல்லாம் செய்ய முடியுமோ அவை அத்தனையையும் இஸ்ரேல் அரசு செய்ய வேண்டும்" என்று சென் கூறினார். "விடுதலையை முன்னெடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் பற்றிய அறிவு என்னிடம் இல்லை. கடைசியாக முடிவாக எது நடக்கிறது என்பது தான் முக்கியமானது. எனது பிள்ளை இன்னும் உயிரோடு இருக்கிறானா அல்லது இறந்துவிட்டானா என்பது கூட எனக்கு இன்னும் தெரியாது. அது தான் உண்மை" என்று தொடர்ந்து கூறினார்.

பணயக்கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படும்வரை போர்நிறுத்தம் ஏற்படுத்தப்படக்கூடாது என்று பணயக்கைதிகளின் உறவினர் தெரிவித்தனர்.

இஸ்ரேல் மக்கள் பணயக்கைதிகளின் உறவுகளுக்கு ஆதரவாக இருக்கின்றனர். பணயக் கைதிகளின் விவகாரத்தை அரசு கையாளும் முறை தொடர்பாக மக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான கோப உணர்வு படிப்படியாக அதிகரித்துவருகிறது. இதற்கு முன்னர் நெத்தன்யாகுவின் அரசை ஆதரித்தவர்களும் அந்தக் குழுவில் அடங்குகின்றனர்.



"நான் வேறு ஒருவருக்குத் தான் வாக்களித்தேன். உண்மையில் நான் வாக்களித்த வேட்பாளர் இஸ்ரேல் நாட்டுக்கு நல்லதைச் செய்திருக்கிறார். மிகத் தைரியமான இராணுவ வீரராக அவர் இருந்தார். ஆனால் தொடர்ந்து 15 வருடங்களாக பிரதம மந்திரியாக அவர் இருந்து வருகிறார். எனவே அவரைத் தான் நாங்கள் குற்றஞ்சாட்ட வேண்டும். பதவியை விட்டு அவர் இனி வெளியேற வேண்டும். இந்த விடயம் எல்லோருக்கும் தெரியும். ஏன் நெத்தன்யாகுவுக்குக் கூட நன்றாகவே தெரியும்" என்று சென் தெரிவித்தார்.




'இஸ்ரேல் மீடியா' என்ற ஊடக அமைப்பின் வேண்டுகோளில் இஸ்ரேல் பல்கலைக்கழகம் மேற்கொண்ட கருத்துக்கணிப்பின்படி நெத்தன்யாகு அரசுக்கு இஸ்ரேல் மக்களிடம் இருந்த ஆதரவு இப்போது முற்றாகச் சரிந்துவிட்டது. நெத்தன்யாகு வெளியேற வேண்டும் என்பதையே இஸ்ரேலிய மக்களில் பெரும்பாலானோர் விரும்புகின்றனர்.

அரசுக்கான ஆதரவு கணிசமான அளவு சரிந்திருக்கின்ற போதிலும், பன்னாட்டு சமூகத்திடமிருந்து கடுமையான கண்டனங்கள் எழுகின்ற போதிலும், ஹமாசின் மீது போரை முன்னெடுக்க அரசு மேற்கொண்ட முடிவுக்கு யூத இனத்தைச் சேர்ந்த இஸ்ரேலியர்களின் ஆதரவு உறுதியாக இருக்கிறது.

இஸ்ரேலில் வாழுகின்ற அரபு இனத்தைச் சேர்ந்த குடிமக்களும் பாலஸ்தீன மக்களும் இஸ்ரேல் யூத இனத்தவரில் ஒரு சிறு பகுதியினரும் போரை ஏற்றுக்கொள்ளாத போதிலும், கருத்துச் சுதந்திரம் தடைசெய்யப்பட்டிருப்பதனால் அரசுக்கு எதிரான எந்தக் கருத்தும் தற்போதைய சூழலில் ஆபத்தானதாகவே இருக்கிறது.

காஸாவுக்கும் அங்குள்ள அப்பாவிப் பொதுமக்களுக்கும் ஆதரவை வெளிப்படுத்தியதற்காக பாலஸ்தீனக் குடிமக்கள் பலரும் இஸ்ரேல் குடிமக்கள் பலரும் இஸ்ரேல் அரசினால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். ஒக்ரோபர் 25ம் திகதி இஸ்ரேல் காவல்துறை வெளியிட்ட அறிக்கையில் வன்முறையையும் பயங்கரவாதத்தையும் தூண்டத்தக்க கருத்துகளை சமூக ஊடகங்களில் பதிவுசெய்ததற்காக 110 பேரை தாம் கைதுசெய்திருப்பதாகத் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்களில் 17 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

பகிரங்கமான முறையில் காஸாவில் வாழும் பொதுமக்களுக்கு ஆதரவு தெரிவிப்பதும், இஸ்ரேல் அரசின் இராணுவ நடவடிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவிப்பதும் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. போருக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டங்கள் அனைத்தும் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. காஸாவுக்கு ஆதரவு தெரிவித்து சமூக வலைத்தளங்களில் கருத்துகளைப் பதிவுசெய்த நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

"எனக்கு இப்போது 22 வயது. கடந்த நான்கு வாரங்களில் நான்கு அடக்கச்சடங்குகளில் நான் பங்குபற்றியிருக்கிறேன். ஒரு பயங்கரவாதத் தாக்குதலில் எனது நண்பர்கள் இருவர் கடந்த

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# கேள்விக்குறியாகும் இஸ்ரேலின் படைத்துறை மேலாண்மை

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் படையினர் காசா பகுதி மீது மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் 5 ஆவது வாரத்தை கடந்து தொடர்கின்றன. வான் தாக்குதல் மூலம் இதுவரையில் 32000 தொன் வெடிகுண்டுகளை சிறிய பிரதேசத்தின் மீது கொட்டிய இஸ்ரேல் கடந்த 2 ஆம் நாளே முழு அளவிலான தரைத்தாக்குதலை ஆரம்பித்திருந்தது. பலநூறு டாங்கிகள் மற்றும் கவசவாகனங்கள் சகிதம் மூன்று முனைகளால் நகர்வுகளை மேற்கொண்ட படையினர் வடக்கு காசாவின் கடற்கரை பகுதியை முற்றாகக் கைப்பற்றி தற்போது உள்பகுதியை நோக்கி நகர ஆரம்பித்துள்ளனர். முன்நகரும் படையணிகளில் இரண்டு அணிகள் தலா 200 - 300 வாகனங்கள் சகிதம் முன்நகர்கின்றன. மற்றைய அணி அதனை விட சிறிய படைஅணியாகும்.




இஸ்ரேலின் தென்பகுதியால் நகரும் அணி 2 கி.மீ அகலமான பதையால் முன்நகர்ந்து கடற்கரையூடாக ஜபாலியா பகுதியை அடைந்துள்ளது. சாற்றி அகதிகள் முகாமின் மறு எல்லையில் அது நிலைகொண்டுள்ளது. இரண்டாவது அணி காசாவை வடக்கு தெற்காக ஊடறுத்து மையப்பகுதி ஊடாக நகர்ந்து கடற்கரையை அடைந்து தற்போது வடக்காக திரும்பி துறைமுகப்பகுதிக்கு அண்மையாக நிலைகொண்டுள்ளது.

இந்த அணியை சேர்ந்த சில கொம்பனி படையினர் அல்-சிபா வைத்தியசாலையை பகுதிக்குள் ஊடுருவியுள்ளனர். மூன்றாவது சிறிய அணி எரோஸ் தடுப்பு நிலை (*Erez checkpoint*) ஊடாக பெயிற் கனூன் (*Beit Hanoon*) பகுதி நோக்கி முன்நகர்கின்றது. இரண்டு பிரதான அணிகள் மீதான ஹமாஸ் படையினரின் தாக்குதலின் கவனத்தை திசைதிருப்பும் நேக்கத்தையே இந்த அணி கொண்டுள்ளதாக தெரிகின்றது. இந்த அணி நகரத்தின் எல்லையை அடைந்து நிலை கொண்டுள்ளது.

கடந்த ஒரு வாரமாக இந்த அணிகள் பெரிய அளவிலான நகர்வுகளை மேற்கொள்ளவில்லை என்பதை செய்மதி படங்கள் மூலம் காணக் கூடியதாக உள்ளது. கைப்பற்றப்பட்ட இடங்களை பலப்படுத்துவதில் தான் அவர்களின் கவனம் உள்ளது. தமது கவசவாகனங்கள் மற்றும் டாங்கிகளை மறைவாக நிறுத்தி, மண்ணுக்குள் புதைத்தவாறு தமக்கு முன் உள்ள திறந்த வெளியின் ஊடான ஹமாஸ் படையினரின் வரவுக்காக



அவர்கள் காத்திருப்பது போல தெரிகின்றது.

அதேசமயம், கடந்த மாதம் 7 ஆம் நாள் ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்திய நாகல் ஒஸ் என்ற இடத்திலும் பெருமளவான கவச வாகனங்கள் சகிதம் இஸ்ரேலின் படையணிகள் நிலைகொண்டுள்ளன. நகர்வுகள் அற்று இருக்கும் இந்த அணிகள் பின்னிருக்கை படையினராக இருக்கலாம். களத்தில் இழப்புக்கள் ஏற்படும் இடங்களுக்கு அனுப்புவதற்காக அல்லது ஹமாஸ் படையினர் பலவீனமடைந்ததும் திடீர் தாக்குதலை பலவீனமான முனையில் நிகழ்த்துவது அவர்களின் நோக்கமாக இருக்கலாம்.

இதனிடையே, ஹமாஸின் போரியல் தந்திரங்கள் வேறுபட்டதாகவே இருக்கின்றது களமுனையை பொறுத்து அவர்களின் தாக்குதல் உத்திகள் அமைந்துள்ளன. பல தாக்குதல்கள் தொடர்பான காணொளிகளை அவர்கள் வெளியிட்டுள்ளவருகின்றனர். ஆனால் அவர்கள் திறந்த வெளிகளில் சமரிடுவதை தவிர்த்தே வருகின்றனர். அதாவது தமது பலத்தை தக்கவைக்க முற்பட்டுவருகின்றனர்.

இஸ்ரேல் படையினர் நகர்ப்புறப் பகுதிகளுக்குள் நகரும்போது ஹமாஸ் படையினர் அவர்களை தாக்கிவருகின்றனர். எனினும் அவர்கள் பொறுமையுடன் எதுவும் செய்யாமல் காத்திருக்கவில்லை. பல சந்தர்ப்பங்களில் சிறு பற்றைகள், இடிந்த கட்டிடங்கள் போன்றவற்றை உருமறைப்பாக பயன்படுத்தி தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.



இஸ்ரேலின் 160 கவசவாகனங்கள் மற்றும் டாங்கிகள் சேதமாக்கப்பட்டடு மற்றும் அழிக்கப்பட்டதாகவும், அதில் 48 மணிநேரத்தில் மட்டும் 25 வாகனங்கள் அழிக்கப்பட்டதாகவும், கடந்த சனிக்கிழமை (11) குசாம் பிரிகேட்டை சேர்ந்த பேச்சாளர் தெரிவித்திருந்தார். சிறு சேதமடைந்த வானகங்களை அந்த இடத்தில் வைத்து திருத்த முடியும், கடுமையாக சேதமடைந்த வாகனங்களை களமுனையில் இருந்து அகற்றவேண்டும்., அதாவது தளத்திற்கு எடுத்துச் சென்று திருத்த முடியும்.

ஆனால் அழிக்கப்பட்டவை அந்த இடத்தில் கைவிடப்படுவதேவழக்கம். எனினும் செய்மதிப்படங்களை அவதானித்தபோது கடந்த 5 நாட்களில் இஸ்ரேல் 88 வாகனங்களை இழந்துள்ளது தெரியவந்துள்ளது. அதாவது அங்கு காணப்பட்ட 383 வாகனங்களில் 23 விகிதமானவை அழிவைச் சந்தித்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஹமாஸ் கூறுவதில் 50 விகிதமானவை உண்மையாக இருக்கலாம் என கருதப்படுகின்றது.

மேலும் இதுவரையில் இடம்பெற்ற சமரில் 48 இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளபோதும், அவர்களின் வாகனங்களின் இழப்புக்களை பார்க்கும் போது அதன் எண்ணிக்கை உயர்வாக இருக்கலாம். டாங்கிகள்



மற்றும் துருப்புக்காவி கவசவாகனங்களை தகர்ப்பதற்கு அவர்கள் பல தாக்குதல் உத்திகளை பின்பற்றுகின்றனர். குண்டுகளை அதில் பொருத்தி அதன் பாதுகாப்பு கவசத்தை தகர்த்த பின்னர் அதன் மீது ஆர்.பி.ஜி தாக்குதலை நடத்துவது, கண்ணிவெடிகளை புதைப்பது மற்றும் ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் மூலம் தாக்குவது என்பன அவர்களின் உத்திகள்.

இந்த தாக்குதல்களில் கவசப்படை பிரிகேட்டின் கட்டளைத் தளபதி கேணல் செல்டக் சியோரும் கொல்லப்பட்டிருந்தார். இந்த இழப்பு அவர்கள் சந்தித்துவரும் இழப்புக்களுக்கு ஒரு சான்று என கருதப்படுகின்றது.



அதேசமயம், ஹிஸ்புல்லாக்களும் ரஸ்ய தயாரிப்பான கொனெற் டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் மூலம் இஸ்ரேலின் டாங்கிகளையே குறிவைத்து வருகின்றனர். பல டாங்கிகள் அழிக்கப்பட்டுள்ளன. ஒக்டோபர் 7 இடம் பெற்ற தாக்குதலிலும் இஸ்ரேல் பல டசின் டாங்கிகளையும், நூற்றுக்கு மேற்பட்ட கவச வாகனங்களை இழந்திருந்தது. எனவே தான் 2005 ஆம் ஆண்டு கைவிடப்பட்ட மேக்காவா-3 வகை டாங்கிகளையும் அவர்கள் மீண்டும் பயன்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். 2023 ஆம் ஆண்டு மேக்காவா-5 வகையான நவீன டாங்கிகளை பயன்படுத்த திட்டமிட்டிருந்த இஸ்ரேல் தற்போது அதனை எட்டவில்லை என தெரிகின்றது.

அதாவது தற்போது இடம்பெறும் போரில் இரு தரப்பும் கடுமையான இழப்புக்களை சந்தித்துவருகின்றனர் என்பது உண்மை, எனினும் இஸ்ரேலின் படைத்துறை மேலாண்மை என்பது நடக்கும் போரில் மிகுந்த விமர்சனத்திற்கு உள்ளாகி வருவதை அவதானிக்க முடிகின்றது. அதவை தான் ஹெரட்ஸ் இதழின் படைத்துறை ஆய்வாளர்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## சிறுபான்மை ... தொடர்ச்சி ...

விளைவுகள் பலவற்றையும் பெற்றுக் கொள்ள அடித்தளமாக அமைந்தது என்று தெரிவிக்கப் படுகின்றது. எனவேதான் சிறுபான்மையினர் தமது அரசியல் பிரதிநிதித்துவத்தினை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு பாதுகாப்பான முறை என்று விகிதாசார தேர்தல் முறை வர்ணிக்கப் படுகின்றது.



மலையக மக்களை பொறுத்தவரையில் அவர்கள் சுமார் நாற்பது வருட காலமாக பிரசாவுரிமை மற்றும் வாக்குரிமை இல்லாத ஒரு சமூகமாக இருந்தனர். இவ்வுரிமைகளை பறித்தெடுத்த ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் தனது பாவத்துக்கு பிராயச்சித்தமாக மீண்டும் இவ்வுரிமைகளை வழங்கிய நிலையில் படிப்படியாக மலையக மக்களின் அரசியல் ஆதிக்கம் வேரூன்றத் தொடங்கியது. உள்ளூராட்சி சபை, மாகாண சபை, பாராளுமன்றம் போன்றவற்றில் மலையக மக்களின் பிரதிநிதிகள் கால்பதிக்கத் தொடங்கினர்.

இதனால் அபிவிருத்திக்கு வலுசேர்க்கப் பட்ட நிலையில் ஏனைய இனங்களுக்கு மத்தியில் தலைநிமிர்ந்து வாழக்கூடிய சூழலும் உருவானது. இந்நிலைக்கு விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையும் கை கொடுத்தது என்பதை மறுப்பதற்கில்லை. இந்நிலையில் தொகுதிவாரி தேர்தல் முறையோ அல்லது கலப்புத் தேர்தல் முறையோ இத்தனை சாதக விளைவுகளையும் ஏற்படுத்தி இருக்குமா என்பதையும் சிந்திக்க வேண்டியுள்ளது.

### சிறுபான்மையினர் ஆதரவு

இதனிடையே தேர்தல் முறை திருத்தம் தொடர்பில் இப்போது அரசின் கவனம் திரும்பியுள்ளது. தேர்தல் முறை திருத்த யோசனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பில் வாத பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனிடையே நடைமுறையிலுள்ள தேர்தல் முறை சட்டம் தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லதொரு நிலைப்பாடு கிடையாது. ஊழல் நிர்வாகத்துக்கும், அரசியல் கட்டமைப்பின் பலவீனத்திற்கும் தேர்தல் முறைமையே காரணமாகுமென்று குற்றம் சாட்டப்படுகின்றது.

மக்கள் தேர்தல் முறைமையில் மாற்றத்தைக் கோருகின்றனர். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள். சிறந்த அரச நிர்வாகத்தை தோற்றுவிக்க வேண்டும் என்பதற்காகவே தேர்தல் முறைமை சட்டத் திருத்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதன் பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசதரப்பு செய்திகள் வலியுறுத்துகின்றன.

இதேவேளை சிறுபான்மை கட்சிகள் சம காலத்தில் நடைமுறையிலுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளன. தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதித்துவங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் நடைமுறையிலுள்ள பாராளுமன்ற தேர்தல் முறைமையை மறுசீரமைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் நிராகரிப்பதாக தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளன. மேலும் பாராளுமன்ற தேர்தல் முறைமையை மறுசீரமைப்பதற்கு முன்பதாக தேர்தல் முறைமை மறுசீரமைப்பு தொடர்பான தெரிவுக்குழுவின் அறிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பிரகாரம் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடாத்த வேண்டும் என்றும் இச்சந்திப்பின்போது வலியுறுத்தல்கள் இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

எவ்வாறெனினும் ஒரு சமூகத்தின் அபிவிருத்தியிலும் சரி நாட்டின் அபிவிருத்தியிலும் சரி தேர்தல் முறைமை காத்திரமான பங்காற்றுகின்றது என்பதை மறுப்பதற்கில்லை. இந்நிலையில் மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் இன்னும் பல்வேறு வெற்றி இலக்குகளையும் அடைய வேண்டிய நிலையில் பொருத்தமான தேர்தல் முறையினை அறிமுகம் செய்து அவர்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும். புதிய தேர்தல் முறையானது சகல இனங்களினதும் உரிமைகளுக்கும் உத்தரவாதமளிக்க வேண்டும்.

• • •

## மட்டக்களப்பு ... தொடர்ச்சி ...

விவசாய நடவடிக்கைகள் காலத்தில் கால்நடைகளை மயிலத்தமடு, மாதவனை பகுதிக்கு கொண்டு செல்வதற்கான தீர்மானங்கள் எடுக்கும்போது அதற்கு ஆதரவாக கருத்துகளை தெரிவித்துவரும் நிலையில் இன்று கால்நடைகளை அடைக்குமாறு கூறுவதானது தமிழர்களுக்கு மறுக்கப்பட்ட நீதியையே வெளிப்படுத்திவருகின்றது.

இதேநேரம் நீதி மன்ற கட்டளையை தாங்கள் மதிப்பதாகவும் இதே போன்று அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வருவார்களா ? என்ற சந்தேகம் உள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கால்நடை பண்ணையாளர் சங்கத்தின் தலைவர் சி. நிமலன் தெரிவித்தார். "இதேபோல் கடந்த காலத்தில் கொழும்பு உயர் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கிற்கும் இதேபோன்றதொரு தீர்ப்பு உயர் நீதிமன்றத்தினால் கட்டளை

பிறப்பித்தும் அவர்கள் அவ்விடத்தில் இருந்து வெளியேறவில்லை, பதிலாக சட்ட விரோத நில ஆக்கிரமிப்பு, அத்துமீறிய குடியேற்றம் மற்றும் கால்நடைகளுக்கு அநீதி விளைவித்தல் என்பன போன்ற நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். சரியான தீர்வொன்று கிடைக்கப்பெறும் வரை நாங்கள் இவ்விடத்தில் இருந்து செல்லப்போவதில்லை, போராட்டத்தினை கைவிடுவதுமில்லை" என தெரிவித்தார்.

எவ்வாறாயினும் மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்களின் போராட்டம் என்பது வெறுமனே வாழ்வாதாரத்திற்கான போராட்டம் அல்ல. மட்டக்களப்பு மாவட்டத்தின் இருப்புக்கான போராட்டம். இந்த போராட்டம் வெற்றி பெறும்போது மட்டுமே மட்டக்களப்பு மாவட்டத்தின் இருப்பினை பாதுகாக்கமுடியும். இன்றைய சூழ்நிலையில் பண்ணையாளர்களின் போராட்டத்துடன் வடகிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பல்வேறு சக்திகள் இணைந்திருக்கின்றன. இதனை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

• • •

## பிரித்தானியா ... தொடர்ச்சி ...

முகிலினி அவர்களால் சிறப்புற ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்நேர்காணலில், இவ் ஆவணத்தைத் தொகுத்து வெளியிடுவதில் தனக்கிருந்த சவால்களைத் தெரிவித்ததோடு, இந்நூலில் இடம்பெறத் தவறிய ஆவணங்களைத் தமக்குத் தந்துதவுமாறும், இந்நூலில் இடம்பெறவேண்டிய திருத்தங்களையும் உள்வாங்கிக் கொள்வதாக திரு அன்ரன் பொன்ராசா அவர்கள் தெரிவித்திருந்தார்.

இதன் பின்னர் இவ்விழாவின் சிறப்பம்சமான நூல் வெளியீடு இடம்பெற்றது. காந்தள் கவிதை பின்னணியில் ஒலிக்க, நூலினை முன்னாள் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரும், மூத்த போராளியுமாகவும் தாயகத்தில் பணியாற்றி, தொடர்ச்சியாகப் புலத்திலும் தாயகப் பணியோடு இணைந்திருக்கும் திரு சுரேஸ் அவர்கள் வெளியிட்டுவைக்க, விழாவிற்கு வருகை தந்திருந்த, எம் அடுத்த தலைமுறையினரான இளையோர்கள் அனைவரும் பெற்றுக் கொண்டமை மனநெகிழ்ச்சியான விடயமாக அமைந்திருந்தது.

தொடர்ந்து, இவ் வரலாற்று ஆவண நூலின் முக்கியத்துவமும், அதன்மீதான தனது பார்வையும்பற்றி, செல்வன் பகலோன் வாமன் அவர்களது உரையும், ஆவணங்களைக் காப்பதன் முக்கியத்துவம்பற்றி, Tamil Guardianல் செயற்பாட்டாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் செல்வி மிதுர்யா அவர்களின் ஆங்கிலத்திலான சிறப்புரையும் இடம்பெற்றன.

இதன்பின்னர், தாயகத்திலும், தொடர்ச்சியாகப் புலத்திலும் தாயகப் பணியாற்றுபவரும், சத்திர சிகிச்சை நிபுணருமான கலாநிதி திரு சூரி அவர்களின் விசேட உரை இடம்பெற்றிருந்தது. அவரது உரையில் தமிழீழ மருத்துவத்துறை மற்றும் சுகாதாரத்துறை பற்றிய தேசியத் தலைவர் அவர்களின் அக்கறை பற்றியும் மக்களையும், போராளிகளையும் காக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் தனது நேரடி அநுபவப் பகிர்வுகளைப் பகிர்ந்திருந்தமை நெகிழ்வாக அமைந்திருந்தது.

தொடர்ந்து, தமிழீழத்தில் முழுமையாக தாயகப்பணியில் செயற்பட்டு, தொடர்ச்சியாகப்



புலத்திலும் தாயகப் பணியாற்றிவரும் திரு அச்சுதன் அவர்களின் சிறப்புரை இடப்பெற்றிருந்தது. இச்சிறப்புரையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இன்றைய சவால்களையும், இதனை நாம் எவ்வாறு எதிர்கொள்ளமுடியும் என்பதுபற்றியும் குறிப்பிட்டதோடு, மாவீரர்கள், தேசியத் தலைவர் என்ற மாபெரும் அறஒளியே தமிழர்கள் எல்லோரையும் நல்வழியில் தமிழர்களாய் ஒன்றிணைக்கும் மகத்தான சக்தி எனவும் தெரிவித்திருந்தார்.

இறுதியாக செல்வன் கயன் யோன்சனின் நன்றியுரையுடன், தேசியக் கொடிகளின் கையேற்பு இடம்பெற்றது. மாவீரர்களது கனவுகளை ஈடேற்ற, உறுதிபூணும்வகையில் 'நம்புங்கள் தமிழீழம்' நப்பிக்கைப் பாடல் ஒலிக்க விழா இனிதே நிறைவேறியது.

2009ன் பின்னரான 14 ஆண்டுகளில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் மேன்மையைக் கொண்டாடும் சிறப்பான விழாவாக இந்நிகழ்வு அமைந்ததாக விழாவிற்கு வருகைதந்தோர் மன நெகிழ்வோடு தெரிவித்திருந்தனர்.

• • •

## காஸாவில் இஸ் ... தொடர்ச்சி ...

வருடம் கொல்லப்பட்டபோது, அவர்களது அடக்கச் சடங்குகளிலும் நான் பங்குபற்றியிருக்கிறேன்" என்று சிஎன்என் (CNN) ஊடகம் ஜெரூசலம் நகர மையத்தில் அமைந்திருக்கும் சீயோன் சதுக்கத்தில் மேற்கொண்ட நேர்காணலில் ஜொனாத்தன் றபாபோட் (Yonatan Rapaport) குறிப்பிட்டிருந்தார்.

தான் ஒரு இசைக்கலைஞன் என்றும், இஸ்ரேல் கடற்படையில் தனது கட்டாய இராணுவச் சேவையின் போது காஸாப் பகுதியில் தான் ரோந்து நடவடிக்கையை மேற்கொண்டிருந்ததாகவும் தெரிவித்த றபாபோட், காஸாவில் நடைபெறும் நிகழ்வுகள் தொடர்பாக பன்னாட்டுச் சமூகத்தின் கருத்துகள் பற்றிய தனது விரக்தியுணர்வை வெளிப்படுத்தினார்.

"காஸாவை ஏன் பழிவாங்குகிறீர்கள் என்று மக்கள் கேட்கும் போது, எமது பொதுமக்களையும் இராணுவ வீரர்களையும் பாதுகாக்கும் உரிமை எமக்கு இல்லையா? ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலுக்கு ஈடான எதிர்த்தாக்குதல் உண்மையில் எப்படியிருக்கும்? பொதுமக்களைக் கொல்வதை இயன்றவரை நாங்கள் தவிர்த்து வருகிறோம். என்று அவர் தெரிவித்தார்.

"இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையே நடைபெற்றுவரும் போரை கறுப்பு வெள்ளையாகப் பார்க்க முடியாது. ஆனால் ஹமாசுக்கு எதிரான போர் அப்படிப்பட்டது தான். இஸ்ரேலிய அரசுக்கும் இஸ்ரேலுக்கும் எதிராக முன்வைக்கப்படும் விமர்சனங்களில் நியாயத்தன்மை இருக்கிறது. ஆனால் இஸ்ரேல் அரசை விமர்சிப்பதிலும் யூத மக்களை வெறுப்பதிலும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். எல்லோரும் அப்படி அவதானமாகக் கதைப்பதாகத் தெரியவில்லை. மேற்குக்கரையை அல்லது காஸாவை ஆக்கிரமிப்பது தொடர்பாக நீங்கள் உரையாடலாம். ஆனால் அதற்காக 1400 அப்பாவிப் பொதுமக்களைக் கொல்வது சரியென்று நீங்கள் எப்படிச் சொல்ல முடியும்.

போருக்கு முன்னர் இஸ்ரேலின் நீதித்துறையைச்சீர்திருத்துவது தொடர்பான அவரது திட்டங்களை எதிர்த்து நான் விமர்சனங்களை முன்வைத்திருந்தேன். அவரது அந்தச் செயற்பாடு எமது நாட்டைப் பிளவுபடுத்தியிருக்கிறது.

"இந்தப் போர் முடிவுக்கு வந்த பின் இந்த அரசு முழுமையாகக் கலைக்கப்படவேண்டும். ஆனால்.. இப்போதோ நாங்கள் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். ஒரு தனி மனிதனாக நெத்தன்யாகுவில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் ஒரு தலைவன் என்ற அடிப்படையில் அவரில் நான் நம்பிக்கை வைத்துத் தான் ஆக வேண்டும்" என்று றபாப்போட் தொடர்ந்து கூறினார்.

அன்றைய தினம் இரவு, அதிகமான இசைக்கலைஞர்களைக் கொண்ட ஒரு கூட்டத்துடன் யொனாத்தன் இணைந்துகொண்டார். பெரும்பாலும் இளையோராக இருந்த அந்தக்குழுவினர், சீயோன் சதுக்கத்தில் கூடியிருந்தார்கள். கிற்றார் வாத்தியங்களை இசைத்துக்கொண்டு, இஸ்ரேல் மக்களின் பாரம்பரியமான பாடல்களை அவர்கள் பாடிக் கொண்டிருந்தார்கள்.

அந்த இளையோர் பாடிய பாடல்களில் கவலை உணர்வை வெளிப்படுத்துபவையும் இருந்தன. நம்பிக்கை உணர்வை வெளிப்படுத்துபவையும் இருந்தன. அவற்றில் ஒன்று பீற்றில்ஸ் (Beatles) இசைக்குழுவினரின் "Let it be" என்ற பாடலைத்தழுவிய "Lu Lehi" என்ற பாடலும் இருந்தது. 1973ம் ஆண்டு யொம் கிப்பூர் (Yom Kippur) போர் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் நயோமி ஷேமர் (Naomi Shemer) என்பவர் அந்தப் பாடலை எழுதியிருந்தார். போரில் இஸ்ரேல் நிச்சயமாக வெற்றியடையும் என்ற நம்பிக்கையை அந்தப் பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன.

அந்தப் பாடல் எழுதப்பட்டுச் சரியாக 50 வருடங்கள் கடந்த நிலையில், மீண்டும் ஒரு தடவை இஸ்ரேல் போரை முன்னெடுத்திருக்கும் தருணத்தில் வியாழக்கிழமை இரவு, சீயோன் சதுக்கத்தில் அந்தப் பாடல் பலமாக ஒலித்துக் கொண்டிருந்தது.

**நன்றி: CNN.COM**

## இரு முனை ... தொடர்ச்சி ...

வில்லை. இந்த நிலையில், உள்நாட்டிலோ வெளிநாடுகளிலோ கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியாது. அதேவேளையில் நாணயத் தாள்களை அச்சிட வேண்டாம் என்று சர்வதேச நாணய நிதியம் கண்டிபாக உத்தரவிட்டுள்ளது. ஏற்கனவே பணவீக்கம் உச்சத்து சென்றமைக்கும் அதுதான் காரணம்.

இதனால், வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை ஈடுசெய்வது அரசாங்கத்திற்கு ஒரு சவாலான பணியாக இருக்கும். நாட்டின் கடுமையான பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு. பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான பல சாத்தியமான நடவடிக்கைகளை அரசாங்கம் கோடிட்டுக் காட்டியுள்ளது.

அதிக வருவாயை உருவாக்கவும், கடன் வாங்குவதற்கான தேவையை குறைக்கவும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுக்கிறத. வணிகச் சூழலை மேம்படுத்துவதற்கும், வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கும், ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கும் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவது இதில் அடங்கும். இதனைவிட நட்டத்தில் செயற்படும் சில நிறுவனங்களை விற்பனை செய்வம் அரசாங்கத்தின் திட்டங்களில் ஒன்றாகும்.

வரவு-செலவுத் திட்ட பற்றாக்குறையை முழுமையாக ஈடுகட்டவும், நிதி இலக்குகளை அடையவும் அரசாங்கத்தால் முடியுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அரசாங்கத்தின் முயற்சிகளின் வெற்றியானது உலகப் பொருளாதார நிலைமை, உள்நாட்டு அரசியல் சூழல், அரசாங்கத்தின் கொள்கைகளை திறம்பட செயல்படுத்தும் திறன் உள்ளிட்ட பல காரணிகளைப் பொறுத்தது.

## எமக்கு நிதி ... தொடர்ச்சி ...

வருகின்றார்கள்.

சர்வதேச சமூகத்தின் பார்வையில் எங்களுடைய போராட்டம் பேசுபொருளாக மாறி உள்ள நிலையில் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் விதமாக இம்முறை வெளியிடப்பட்ட வரவு செலவு திட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக நிதி ஒதுக்கப்பட்ட விடயம் கண்டனத்துக்கு உரியது.

இவ்வருடம் பொங்கல் தினத்தில் யாழ்ப்பாத்தில்வைத்து யாரும் காணாமல் ஆக்கப்படவில்லை என தெரிவித்த ஜனாதிபதி இப்போது குறித்த விடயத்திற்காக நிதி ஒதுக்குவதாக தெரிவித்திருக்கின்றார் அப்படியானால் எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டிருப்பதனை அவர் ஏற்றுக்கொள் கின்றாரா? என கேள்வி எழுப்புகின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளாகிய நாம் தொடர்ச்சியாக எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காகவே போராடி வருகின்றோம். இந்நிலையில் எங்களுடைய போராட்டத்தை சிதைக்கும்வகையில் அதற்கு இழப்பீடு வழங்குவதாகக்கூறி சர்வதேச சமூகத்தை ஏமாற்றப் பார்க்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பண்ணையாளர் ... தொடர்ச்சி ...

அங்கு சட்டவிரோதமாக குடியேறியவர்களை இலங்கை அரசு உடனடியாக வெளியேற்றி அந்த பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதே தற்போதைய பிரச்சனையை உடனடியாக முடிவுக்கு கொண்டுவரும். இழப்புக்களை சந்தித்த பண்ணையாளர்களுக்கு இலங்கை அரசு இழப்பீடுகளையும் வழங்கவேண்டும். மேலும் எதிர்காலத்தில் அங்கு அவ்வாறு ஏற்படாது இருக்க தேவையான நடைமுறைகளை மேற்கொள்ளவேண்டும்.

இதனை தான் தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழ் அமைப்புக்களும் வலியுறுத்த வேண்டும். அந்த மக்களின் வாழ்வையும், இருப்பையும் காப்பது எமது இன்றைய கடமை என்பதை நாம் அனைவரும் மறந்துவிடலாகாது.

## ரணிலின் வரி ... தொடர்ச்சி ...

பொருளாதார மீட்சியை அது எதிர்பார்க்க முடியாது. வரவு செலவுத்திட்டத்தில் ஏற்படும் பற்றாக்குறை 7.1 விகிதமாக கணிக்கப்பட்டாலும் அது மேலும் அதிகரிக்கும் வாய்ப்புக்களே உள்ளன. அது 9.1 ஆக இருக்கலாம் என அரசு எதிர்பார்க்கின்றது.

எதிர்வரும் வருடம் அரசின் செலவீனம் 22 விகிதமாக இருக்கலாம் என கணிக்கப்படுகின்றது. அது 20 விகிதமாக இருக்கும் என அனைத்துலக நாணயநிதியம் கணிப்பிட்டிருந்தது. இந்த வருடம் அது 19 விகிதமாக இருந்தது. இலங்கையில் பொருட்களின் விலைகள் அடுத்த வருடம் மீண்டும் அதிகரிக்கலாம் என அது மேலும் தெரிவித்துள்ளது.

## அருவுருவமான ... தொடர்ச்சி ...

வாரமாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரகடனப் படுத்தியிருந்தனர். இன்றைக்கும் சிறீலங்கா அரசு அதிக வருமானமீட்டும் மர வியபாரத்தின் மூலகர்த்தாக்கள் தமிழீழ விடுதலைப்புலிகளே ஆவார். புலிகள் தொடக்கிவைத்த அந்த அரிய பணியைத் தமிழர்கள், கார்த்திகை மாதமென்றால் அது மரநடுகை மாதம் எனப் பிரகடனம் செய்து தமிழ் தேசத்தை சூழல்நேயமிக்கதாக மாற்றிக் கொண்டிருக்கின்றனர். அரசுடைய இனங்களே கவனமெடுக்காத இதுபோன்ற விடயங்களை, நிழல் அரசொன்றின் இனம் கட்டுக்கோப்புடன் செய்துகொண்டிருப்ப தெல்லாம், என்றும் பாராட்டப்படவேண்டிய விடயம். இவையனைத்தையும் அருவுருவமாக நின்று ஆற்றிக்கொண்டிருக்கும் மாவீரர்கள் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

## இலங்கை - இந்திய ... தொடர்ச்சி ...

ஒருங்கிணைப்பாளர் அமைச்சர் ஜீவன் தொன்டமான் அனுப்பி யிருந்தார். அமைச்சர் கலந்து கொள்வதற்கான அனுமதியை தமிழக முதல்வர் வழங்கியபோதும், இறுதி நேரத் தில் அரசியல் அனுமதி என்ற கார ணத்தை காட்டி இந்திய மத்திய அரசு அதனை தடுத்திருந்தது.

இந்தியாவுக்கும் - சீனாவுக்கு மிடையில் உள்ள முரன்பாடுகளை பயன்படுத்தி தமது நலன்களை எட்டலாம் என ஒரு சில தமிழ் அமைப்புக்களும், தனிநபர்களும் செயற்பட்டு வருகையில், இந்திய மத்திய அரசுக்கும், தமிழகத்திற்கும் இடையிலான முரன்பாடுகள் அவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## கேள்விக்குறி ... தொடர்ச்சி ...

அமோஸ் கரிலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹமாஸ் படையினரை சரணடைய வைக்க அவர்களால் முடியவில்லை மேலும் கைதிகள் பரிமாற்ற உடன்பாட்டுக்கு இஸ்ரேல் செல்ல வேண்டிய நிலையை ஏற்படுத்தி வருகின்றனர். கைதிகளை படை நடவடிக்கை மூலம் மீட்காது பரிமாற்றத்திற்கு சென்றால் அது ஹமாசுக்கு இரட்டிப்பான வெற்றியை வழங்கும் என அவர் தனது ஆய்வில் தெரிவித்துள்ளார்.